# வணிக தீபம்

# VANIHA THEEPAM

## 2013

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

வணிகதீபம்

தீபம் 3

**December**



இதழாசிரியர் : தி. புஸ்பரூபன்

# ஆசியுரை

**"வணிகதீபம்"** சஞ்சிகையின் இதழ் மூன்றிக்கு ஆசியுரை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகூறுகின்றேன். க.பொ.த (உ/த) வணிகப்பிரிவு மாணவர்களின் விடா முயற்சி மிகவும் பராட்டிற்குரியது. இவர்களுடைய சுய ஆக்கங்கள் இஞ் சஞ்சிகையூடாக வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. மாணவர்களின் முயற்சி வெற்றி பெற்று பல்கலைக்கழகம் சென்று பட்டங்கள் பல பெறவும் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொறுப்பாசிரியர் திரு. சி: சத்தியசாயிபாபாவிற்கும் பாராட்டுக்களைத் தெரிவித்து நிறைவு செய்கிறேன்.

Nubsall—
அதிபர்
MRS.V.MEHALINGAM
PRINCIPAL
J/NAVATKULY MAHA VIDYALAYAM
KAITHADY

## பொறுப்பாசிரியர் உரை

தரம் 13 கலை வர்த்தகப்பிரிவு மாணவர்களின் **"வணிக தீபம்"** எனும் மாதாந்த சஞ்சிகை வெளிவருதையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

மேலும் **"வணிகதீபத்தின்"** 3வது சுடர் எதிர்வரும் 6.12.2013 அன்று திரு. புஸ்பரூபன் தலைமையில் வெளியிட இருக்கின்றார்கள். இவர்களின் இத்தகைய முயற்சிகளுக்கு பொறுப்பாசிரியராகிய நான் மிகுந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இவ் வணிகதீபத்தின் சுடர்கள் தொடர்ந்து ஒளிர வேண்டும் என நான் இறைவனை வேண்டி நிற்கிறேன்.

பொறுப்பாசிரியர்

## இதழாசிரியர் உள்ளத்திலிருந்து...

வளர்ந்து வரும் வர்த்தக கல்விக்கு வளமூட்டி வரும் வணிகதீபத்தின் மூன்றாவது இதழ் வெளிவருவதை இட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். மாதம்தோறும் மாணவர்களின் மனம்கவர்ந்த இச் சஞ்சிகை அச்சுருவில் வெளிவருகின்றது. இதனால் எமது சஞ்சிகையினுடைய வாசகர்கள் மிகுந்த மகிழ்வும் நன்மையும் அடைவார்கள் என நான் நம்புகிறேன்.

இவ் வணிக தீபம் சிறப்புற வெளியீடு செய்வதற்கு எமக்கு கைகொடுத்துதவிய அதிபர், பொறுப்பாசிரியர், மாணவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிக்ள் என்றென்றும் உரித்தாகுக.

இன்று வரை ஒளி வீசிய தீபம் என்றும் இனிதாக ஒளி வீச உங்கள் நல்லாதரவு தொடரவேண்டும்

**"திக்கெட்டும் தீபஒளி திகழட்டும்"**

# தீபத்தின் உள்ளே...

பக்க இலக்கம்

- நுகர்வோர் சூழலும் பாதுகாப்பும் 1
  செல்வன். தி. புஸ்பரூபன்
- வணிகச் சூழல் 9
  செல்வன். தி. புஸ்பரூபன்
- வணிகக் கல்வி வினாவிடைகள் 16
  செல்வன். வி. விதுசன்
- பொருளாதாரவளர்ச்சிக்கான காரணிகள் 18
  செல்வன். ப. லக்சன்
- சந்தை அமைப்பு 21
  செல்வன். கோ. அரவிந்தன்
- 2007ம் ஆண்டு கம்பனிச் சட்டம் 26
  செல்வன். சி. சஞ்சீவன்
- கணக்கீட்டு எண்ணக்கருக்கள் 30
  செல்வன். சி. நிறோயன்
- பொதுத் தகவல் தொழில்நுட்ப வினாவிடைகள் 34
  செல்வன். சி. நிறோயன்
- பல்தேர்வு வினாவிடைகள்
  - பொருளியல் 38
  - வணிகக் கல்வி 44
  - கணக்கீடு 49

# நுகர்வோர் சூழலும் பாதுகாப்பும்

## இன்றைய நுகர்வோர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

- ✓ உலகமயமாக்கல்
- ✓ அதிகரித்த இறக்குமதி
- ✓ அதிகரித்த விளம்பரம்
- ✓ வணிகங்களுக்கிடையிலான அதிக போட்டி

## பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரங்கள்

- ✓ எந்தவொரு பண்டத்தினதும் விலை குறிப்பிடல் பொறியிடல் வினை மற்றும் உற்பத்தி தொடர்பால் நுகர்வோரைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை வணிகங்களுக்கு எதிராக எடுத்தல்.
- ✓ நுகர்வோர் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. உற்பத்தி இறக்குமதி, களஞ்சியப்படுத்தல் தொடர்பாடல் நுகர்வோருக்கு விஷேட விதிகளை உருவாக்குதல்.
- ✓ பொருட்களின் தரம் தொடர்பாக விதிமுறைகளை உருவாக்குதல்.
- ✓ மேற்கூறிய நிபந்தனைகளுக்கு அமைவாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளாத வணிகர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் விசாரனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்தல்.

## இலங்கை தரக்கட்டளைப் பணியகம்

- ✓ இலங்கையில் 1964ம் ஆண்டு 38ம் இலக்க தரப்பணிகள் கட்டுப்பாட்ச் சட்டத்தின் கீழ் 1965ம் ஆண்டு இலங்கை தரக்கட்டளைப் பணியகம் உருவாக்கப்பட்டது
- ✓ 1984ம் ஆண்டு 6ம் இலக்க இலங்கை தரக்கட்டளைப் பணியகம் முழுமையாக செயற்படத் தொடங்கியது.

## SLS இன் பணிகள்

- ✓ தரங்களை உருவாக்குதல்
- ✓ தர முறையினை நடைமுறைப்படுத்தல்
- ✓ தரப்படுத்தல் மற்றும் தரக்கட்டுப்பாடு தொடர்பில் பயிற்சி நெறிகளை வழங்குவர்
- ✓ தரப்படுத்தல், தரக்கட்டுப்பாடு முறைகளை அபிவிருத்தி செய்தல்
- ✓ ஆய்வு கூட வசதிகளை வழங்குதல்
- ✓ மின்சாதன பொருட்கள் தொடர்பில் அவற்றின் வினைத்திறனை மதிப்பிட்டு தரச் சான்றுதல் வழங்குதல்

- ✓ உள்நாட்டு தர விருதுகளை வழங்குதல்
- ✓ சர்வதேச தர விருதுகள் தொடர்பான நடைமுறைகளை செயற்படுத்தல்
- ✓ நுகர்வோர் கல்வியை வளர்த்தல்
- ✓ நூலக வசதி

## தரம்

தரம் என்பது உற்பத்தியால், விற்பனையால், நுகர்வில் உச்ச வினைத்திறனை ஏற்படுத்துவதற்காக விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியில் அனுபவம் கொண்டோரில் அங்கீகாரத்துடன் தேசிய, சர்வதேச ரீதியில் காணப்படுகின்ற நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் விதப்புரை தரமாகும்.

## தரத்தினை நடைமுறைப்படுத்தல்

❖ தன்னிச்சையான முறை

தரப்படுத்தல் தொடர்பில் இலங்கை தரக்கட்டளைக்கணியகத்தின் எந்தவொரு உந்துதல் இன்றியும் தானாகவே நிறுவனம் முன் வந்து தர முறைகளைப் பின் பற்றுதல். இம் முறையின் கீழ் குறித்த உற்பத்தி தரமானது என்பதை இறுதியாக பாவணையாளர் அலுவல்கள் அதிகார சபையே முடிவு செய்யும்.

## தரக்குறியீடுகள் மூலமான தரப்படுத்தல் முறை

இலங்கை தரக்கட்டளை பணியகத்தால் கட்டாயமாக பெறவேண்டும் என்ற அடிப்படையில் SLS குறியீட்டின் ஊடாக வழங்கப்படுகின்ற தரப்படுத்தல் முறை இதுவாகும்.

## SLS குறியீடு

SLS குறியீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு ISO 9001 : 2000 என்ற தர முறையின் அடிப்படையில் 12 தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதன் ஊடாக வழங்கப்படுகின்ற தரக்குறியீடு இதுவாகும்.

## ஏற்றுமதிக்கு முன் பரிசோதனை

இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற பண்டங்களின் குறிப்பிட்ட சில பண்டங்களுக்கு கட்டாயமாக மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனை இதுவாகும். குறிப்பாக விவசாயப் பொருட்களுக்கு இது கட்டாயமாக தேவைப்படுகிறது.

இலங்கைத் தரக்கட்டளைப் பணியகத்தின் ஏற்றுமதியாளர்கள் குறிப்பிட்ட பரிசோதனையை மேற்கொண்டதற்கான சான்றிதளைப் பெற்றால் மாத்திரமே விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும்.

## இறக்குமதி பரிசோதனை

1987ம் ஆண்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் இறக்குமதி செய்யப்படுகையில் கட்டாயம் மேற்கொள்ளவேண்டிய பரிசோதனை இதுவாகும்

## ISO 9000+ ISO 9001 :2008 தரக்குறி

ISO 9000 ஆனது குறிப்பிட்ட உற்பத்தி நிறுவனம் ISO வின் தரத்திற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ளது என்பதற்காக வழங்கப்படுகின்ற தரக்குறியீடு இதுவாகும். உற்பத்தி பரிசோதனை , ஊழியர்பயிற்சி, அறிகையிடுதல், உற்பத்தியில் தவறுகளைக்குறைத்தல் போன்ற விடயங்களை ISO 9000 சான்றுபடுகின்றது.

## ISO 9000

தர முகாமைத்துவம் மற்றும் தரத்தினை ஸ்தாபித்தல் என்பதற்கு வழிகாட்டல் இதனூடாக தரப்படுகின்றது.

## அவதி நிலை புள்ளிக் கட்டுப்பாட்டு ஆய்வு

உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள இரசாயனம் பொருட்கள் தொடர்பில் வழங்கப்படுகின்ற சர்வதேச தரக்குறியீடு இதுவாகும்.

இறைச்சி, மீன் மற்றும் கடலுணவுப் பொருட்கள், தேயிலை, விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியின் போது இச்சான்றுதழ் கட்டாயம் பெறப்படல் வேண்டும்.

## அளவை நிலுவை நியமங்கள்

இலங்கையில் வணிக நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுகின்ற அளவை நிலுவைச் சாதனங்களை சட்ட முறையாக கையாழ்வதற்கென 1995ம் ஆண்டு 35ம் இலக்க அளவை அலகு நியமம் மற்றும் சேவைகளுக்கான சட்டம் உருவாக்கப்பட்டுள்ளன.

12 மாதங்களுக்கு ஒரு முறை இவை அரச இலட்சனை பொறிக்கப்படல் வேண்டும். இது தொடர்பில் அளவை அலகு நியமம் மற்றும் சேவைகள் திணைக்கழகம் அதிகாரம் கொண்டுள்ளது.

## உணவுச் சட்டம்

1980ம் ஆண்டு 26ம் இலக்க சட்டமானது தயாரிக்கப்படும் உணவு உற்பத்திகளின் விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல் நுகர்வோரின் சுகாதாரத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்துவதற்கான சட்டம் இதுவாகும்.

## இலங்கை தரக் கட்டளை பணியகத்தால் நடை/முறைப்படுத்தப்படும் தரக்குறியீடுகள்

**SLS**

**ISO 9001 :2008**

**ISO 14001 :2004**(சூழல் முகாமை முறை)

**ISO 22000** : 2005 (உணவுப் பாதுகாப்பு)

**FACCP**

**OHSAS 18001 :2007**

தொழில் சூழலில் ஊழியனின் தொழில், பாதுகாப்பு, சுகாதாரம், என்பவற்றை உறுதிப்படுத்தும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தரச் சான்றுதல் ஆகும்.

## SA 8000 சமூகப் பொருப்பு

ஒரு நிறுவனம் சர்வதேச மனித உரிமை சட்டங்களை மதிக்கின்றதா, சர்வதேச ஊழியர் சட்டங்களை மதிக்கின்றதா என்பதை உறுதிப்படுத்தும் சான்றுதல் இதுவாகும்.

## GMP

உற்பத்திக்குப் பயன்படுகின்ற மூலப் பொருட்கள் தரமாக அமையும் போது இச் சான்றுதழ் வழங்கப்படும்.

## வலு செயற்திறன் தரப்படுத்தல்

நிறுவனங்களின் மின் பாவனையின் செயற்திறனுக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

## புலமைச் சொத்துக்களை பாதுகாத்தல்

1. ஆக்கவுரிமை
2. புதிப்புரிமை
3. வியாபாரக்குறி

# மனிதவள முகாமைத்துவம்

அநேகமான வணிகங்களில் மனித வள முகாமைக்கென தனியான துறை காணப்படுகின்றன.இதன் பிரதான கருமம் யாதெனில் நிறுவனத்தின் மனித வளங்களை முகாமை செய்வதாகும். மனித வளங்கள் என்பவை நிறுவனத்தின் நோக்கம் குறிக்கோளை அடைவதற்கு உதவும் ஊழியங்களாகும். நிறுவனத்தின் உற்பத்தி, சந்தைப்படுத்தல், நிர்வாகம், கணக்கீடு ஆகிய துறைகளில் பல்வேறு பதவி வகிக்கும் ஊழியங்களாகும். மனித வள முகாமைத்துவத்தின் பிரதான கருமங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- மனித வள திட்டமிடல்
- ஆட்சேர்த்தலும் தெரிவு செய்தலும்
- திசை முகாமைப்படுத்தல்
- பயிற்சி அபிவிருத்தி
- பதவியுயர்வு, இடமாற்றம்,பதவி நீக்கம்
- செயற்திறன் மதிப்பீடு
- சம்பளங்களும் கொடுப்பனவுகளும்
- ஒழுக்கம்
- நலன்களும், தொழில், வாழ்க்கைத்தரம்
- வெளிச் சூழல்
- தொழில் விருத்தி, நலன்புரி

## மனித வள திட்டமில்

நிறுவனத்திற்கு தற்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் தேவையான ஊழியர் வகை எண்ணிக்கையை தீர்மானித்தல் மனித வள திட்டமிடல் ஆகும். ஒவ்வொரு தொழிலுக்கும் பொருத்தமான ஊழியரை தெரிவு செய்தல் மனித வள திட்டமிடலின் பணியாகும். இங்கு ஊழியர் கேள்வி மற்றும் நிரம்பலை சரியாக அனுமானித்து கொள்ளல் வேண்டும். உதாரணமாக வளர்ந்து வரும் வணிகம் ஒன்றிக்கு 20 தரவு ஊழியர்கள் தேவைப்படும் பட்சத்தில் அதற்கேற்ற வகையில் ஆட்சேர்த்தல் செய்தல் வேண்டும்.

## ஊழியர் கேள்வியைத் தீர்மானித்தல்

எதிர்காலத்தில் நிறுவனத்துக்கு அதிக ஊழியர் தேவைப்படலாம். அதே போன்று தற்காலத்தில் இருக்கின்ற ஊழியர் நிறுவனத்தின் தேவையை விட அதிகமாக காணப்படலாம். எதிர்காலத்திற்கு தேவையான ஊழியர் எண்ணிக்கையை தீர்மானிப்பதற்கு பின்வரும் காரணிகள் கருத்தில் கொள்ளப்படும்.

1. கடந்த கால தகவல்களைப் பயன்படுத்தல்
2. ஊழியர் உற்பத்தித் திறன்
3. வேலை படிப்பு
4. முகாமைத்துவ அறிவு
5. ஊழியர் புரள்வு வீதம்

## ஊழியர் நிரம்பலை ஆய்வு செய்தல்

எதிர்காலத்தில் தேவைப்படும் ஊழியர் எண்ணிக்கையை தீர்மானிக்க முன் நிறுவனத்தில் தற்போது காணப்படும் ஊழியர் எண்ணிக்கையை தீர்மானிக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு தொழிலும் இருக்கின்ற ஊழியர் உண்ணிக்கை, அவர்களின் கருமம், வயது, தகைமை, செயற்றிறன் மதிப்பீடு என்பவற்றை அவதானித்து ஆய்வு செய்தல் வேண்டும். எதிர்காலத்தில் தேவைப்படும் ஊழியர் எண்ணிக்கையை இதைக்கொண்டே தீர்மானித்தல் வேண்டும். இங்கு ஊழியர் பற்றாக்குறை அல்லது மேலதிக ஊழியர் இருக்கின்றாரா? என்பதை அறிய முடியும்.இது இரு விதமாக திட்டமிடப்படும்.

## ஆட்சேர்த்தல்

இது மனித வள முகாமைத்துவத்தின் மிக பிரதான கருமம் இதுவாகும். மனித வளத்துறை எப்போது குறிப்பிட்ட தொழிலுக்கு மிகப் பொருத்தமான ஊழியரை தெரிவு செய்தல் வேண்டும். போட்டிச் சூழலில் மிகப்பொருத்தமான ஊழியரை நிறுவனத்திற்கு தெரிவு செய்தல் வேண்டும். ஆட்சேர்த்தலின் போது பின்வரும் காரணிகளை கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

1. தொழில் இயல்பு
2. தொழிலை சிறப்பாக ஆற்றுவதற்கு ஊழியருக்கு காணப்பட வேண்டிய திறன்.
3. ஊியரை ஊக்குவிக்க, மற்றம் தக்க வைக்க எத்தகைய வழி முறைகளை பின்பற்றல் வேண்டும் என கருத்தில் கொள்ள வேண்டும்

## வேலை ஆய்வு

ஆட்சேர்த்தலின் முன்பு மனித வளத்துறை வேலை ஆய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும். வேலை விபரம் என்பது தொழில் வரைவிலக்கணம் தொடர்பான ஆய்வாகும். தொழிலுக்குத் தேவையான திறன்கள், பயிற்சி மற்றும் கருமங்கள் என்பவற்றை ஆய்வு செய்தல் வேண்டும். ஊழியர்களைத் தெரிவு செய்தல்,சம்பளங்களைத் தீர்மானித்தல், பதவியுயர்வு போன்றன உள்ளடங்கும். இது ஐந்து பிரிவுகளை கொண்டது.

## வணிக எதிர்பாப்புக்கள்

முயற்சியும் தமது தொழிற்பாடுகளினூடாக நெடுங்காலத்திலும், குறுங்காலத்திலும் அடைந்து கொள்வதற்கு எதிர்பாத்திருக்கின்ற அடைவ நிலைகளே வணிக எதிர்பாப்புக்கள் எனப்படுகின்றது.

## தூரநோக்கு

வணிக நிறுவனமொன்றின் நீண்ட கால கனவு எனவும், அதன் அனைத்துப்பகுதிகள்,தொழிற்பாடுகளையும் உள்ளடக்கியதான ஒட்டுமொத்தமான மகுட வாசகம் எனவும் கூற முடியும். நிறுவனமொன்றின் சமூக மதிப்பு, அதன் அக்கரையுடையோரின் அங்கீகாரம் போன்ற விடயங்களை அடிப்படையாக வைத்து இது கட்டியெழுப்பப்படுகின்றது. மிக நீண்ட காலத்தில் என எதிர்பார்த்திருக்கின்ற பண்பு சார்ந்ததும், கால வரையறையற்றதுமான கருத்து வாசகமாக இதனை குறிப்பிட முடியும்.

## இலட்சிய நோக்கு

வணிக மொன்றினால் கட்டியெழுப்பப்பட்டுள்ள தூரநோக்கத்தினை வெளிவாகவும், கருத்துள்ள வகையிலும் வெளிப்படுத்தும் கூற்று வாசகம் இலட்சிய நோக்க கூற்று எனப்படும். வணிகமொன்று ஏன் தொழிற்படுகின்றது, எதனை அடைவதற்கு எதிர்பாக்கிறது, எத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடிக்கப் போகின்றது என்பவற்றை இது எடுத்துக் காட்டுகின்றது. இதனுள் வணிகத்தின் தன்மை, உற்பத்தியின் தன்மை, சந்தைப் பரப்பு, சமூகப் பொறுப்பு, வாடிக்கையாளரின் தன்மை,இலாபத் தன்மை, வளர்ச்சி, தத்துவங்கள் போன்ற உள்ளடக்கங்களை அடக்கியிருக்கும்.

## இலக்கு

வணிக மொன்றின் இலட்சிய நோக்கத்தினை தெளிவாகவும், பொருட் செறிவாகவும், விளக்கத்துடன், அவ் வணிகத்தினால் குறுகிய காலத்தில் அடைந்து கொள்வதற்கு எதிர்பாத்திருக்கின்ற அனைத்து குறிக்கோள்களையும் ஒன்றுபடுத்திக் குறிப்பிடுகின்ற நீண்ட காலத்தில் அடையக்கூடிய வணிக எதிர்பாப்பு இலக்கு எனப்படும். இது கணிய ரீதியான விடயமாகவும், காலவறை கொண்டதாகவும் அமைந்திருக்கும்.

## குறிக்கோள்

வணிகமொன்று, குறுகிய காலத்தில் அடைந்து கொள்வதற்கு எதிர்பாத்திருக்கின்ற திட்ட வட்டமான, அளவு சார்ந்த, வணிக எதிர்பாப்பாகும். இது இலாபத்தன்மை, நிலைத்திருக்கும் தன்மை தொடர்பினை மிகவும் நடைமுறைச் சாத்தியமான விடயங்களை உள்ளடக்கியவகையில்

காணப்படும். வணிகமொன்றின் குறிக்கோளானது ஐந்து அடிப்டையான இயல்புகளைக் கொண்டதாக காணப்படும். இதனை சுருக்கமாக "SMART" எனக் கூறமுடியும்.

- ✓ திட்டவட்டமானது
- ✓ அளவிடக்கூடியது
- ✓ அடையக்கூடியது
- ✓ மெய்மையானது
- ✓ கால அளவுடையது

1. கரும ஆய்வு
2. செயற்பாட்டு ஆய்வு
3. திறன் ஆய்வு
4. வகிப்பங்கு ஆய்வு
5. செயற்றிறன் ஆய்வு

## வேலை விபரணம்

தொழிலை இலகுவாக வரைவிலக்கணப்படுத்துவதற்கு தேவையான தகவல்களை உள்ளடக்கியது வேலை விபரணம் ஆகும்,

### பொதுவாக வேலை விபரணமொன்றில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும்

1. பொதுவான தகவல்கள்
   பதவி, தொழில், இடம், பிரதான கருமங்கள்

2. தொழில் உள்ளடக்கம்
   கருமங்களின் விளக்கம், பொறுப்பு, அதிகாரம்

3. வேலை சூழல்
   பௌதீக சூழல், சமூக சூழல், பொருளாதார சூழல்

4. செயற்றிறன் தகவல்கள்
   செயற்றிறன் மதிப்பிடலின் அடிப்படைகள்

## வணிகச்சேர்க்கைகளின் வகைகள்

1. நிலைக்குத்துச் சேர்க்கை
   வணிகச் செயற்பாடுகளின் பல்வேறு கட்டங்களில் ஈடுபடும் கம்பனிகள் இணைதல் நிலைக்குத்துச்சேர்க்கை எனப்படும்.

2. கிடைக் சேர்க்கை
   ஒரே வகை வணிகக் கருமங்களில் ஈடுபட்டிருக்கும் இரு கம்பனிகள் இணைதல் நிலைக்குத்துச் சேர்க்கை எனப்படும்.

3. கலப்புச் சேர்க்கை
   ஒரே வகையைச் சேராத வெவ்வேறு வகையான வணிகங்கள் ஒன்று சேருதல் கலப்புச் சேர்க்கை எனப்படும்

4. வியாபார மேம்பாட்டுக்கான சேர்க்கை
   வெவ்வேறு பிரதேசங்களில் உள்ள சந்தைக்குள் காணப்படும் கம்பனிகள் இணைதல்

5. உற்பத்தி விரிவாக்கத்துக்கான சேர்க்கை
   குறித்த ஒரு பொருளை உற்பத்தி செய்யும் கம்பனி அப்பண்டத்தின் பாகங்களை உற்பத்தி செய்யும் கம்பனியுடன் இணைதல்.

## அங்கீகார வணிகம் உருவாக்கப்படும் முறைகள்

6. உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகம்
7. உற்பத்தி அங்கீகார வணிகம்
8. வணிக முறைக்கான அங்கீகார வணிகம்

### உற்பத்தி அங்கீகார வணிகம்

அங்கீகாரம் அளிப்பவருடைய வியாபாரக் குறியுடன் பொருட்களை உற்பத்தி செய்து தானே விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் பெற்றவருக்குப் அனுமதி வழங்கும் அங்கீகார வணிகம்.

### உற்பத்தி பொருள் அங்கீகார வணிகம்

அங்கீகாரமளிப்பவரிடமிருந்து அவருடைய வியாபாரக்குறியுடன் பொருட்களை கொள்வனவு செய்து அங்கீகாரம் பெற்றவர் மீள் விற்பனை செய்வதற்கான உரிமையளிக்கும் அங்கீகார வணிகம்.

### வணிக முறைக்கான அங்கீகார வணிகம்


அங்கீகாரமளித்தவருடைய பெயரிலும் அவருடைய முறையிலும் வணிகத்தை நடாத்துவதற்கு அங்கீகாரம் பெற்றவருக்கு அதிகாரமளிக்கும் அங்கீகார வணிகம்.

# வணிகச் சூழல்

வணிகச் செயற்பாடுகளுக்கு சாதகமான அல்லது பாதகமான எல்லா நிலைமைகளும் வணிகச் சூழல் எனக்குறிப்பிடலாம்.

**எல்லா சூழலையும் வணிகம் எதிர்கொண்டு வெற்றியடைய வேண்டியதன் அவசியம்**

1. போட்டியாளரைச் சரியாக எதிர்கொள்ள
2. புதிய வணிகச் சந்தர்ப்பங்களை இனங்காண
3. புதிய தொழில் நுட்பங்களையும் தொழில் நுட்ப மாற்றங்களையும் கண்டறிய
4. சூழ்நிலை மாற்றத்துக்கு தாமும் மாறல்
5. வணிக குறைபாடுகளைக் கண்டுகொள்ள




## அகச் சூழல்

### உரிமையாளர்

வணிகத்தின் தூரநோக்கு, இலட்சிய நோக்கு, இலக்கு என்பவற்றை உருவாக்குபவர் உரிமையாளர் ஆவார்

### முகாமையாளர்

அகச் சூழலில் மிகவும் முக்கியமானவர் முகாமையாளராகும் அவர் உரிமையாளரின் வளங்களை செயற்றிறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தி உரிமையாளரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான பொறுப்பை ஏற்பவர்.

### ஊழியர்கள்

வணிகத்தில் உள்ள மிக முக்கியமான வளம் மனிதவளமாகும் இங்கு ஊழியர் எனக்கூறப்படுவது முகாமையாளர் தவிர்ந்த ஏனைய வேலையாட்களாகும்

### அமைப்புக்கலாசாரம்

வணிகத்தின் அமைப்புக் கலாசாரம் அந்த வணிகத்தைப் பிறதரப்பினருக்கு இனங்காட்டும் நிறுவனத்தின் மதிப்பும் அதன் நற்செயல்களும் ஊழியர்கள் உரிமையாளர் வெளித்தரப்பினர்களுடன் கொண்டுள்ள உறவை வெளிப்படுத்தும்

### அமைப்பொழுங்கு

அதிகாரமும் பொறுப்புக்களும் பகிர்ந்தளிக்கப்பட்ட முறையே இங்கு அமைப்பொழுங்கு எனப்படும்.

## புறச் சூழல்

## பேரினச் சூழல் காரணிகள்

### பொருளாதாரச் சூழல்

கொள்வனவாற்றல் பொருளாதாரக் காரணியில் தங்கியுள்ளது. இதுதொடர்பில் வருமானம், பொதுவிலைமட்டம், சேமிப்பு, கடன், கடன் பெறக்கூடிய தாராளத்தன்மை, போன்ற பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குடையன.

### அரசியல் சட்டச் சூழல்

அரசியல் சட்டச் சூழல் வணிகத்தில் மிகவும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் ஒன்றாகும். ஆகையால் இந்தச் சூழல் பற்றி வணிகர்கள் கூடுதலான அக்கறை கொள்ளுதல் வேண்டும். அரசியல் சட்டச் சூழலில் உள்ளடங்கும் அடிப்படையான காரணிகள்.

- சட்டதிட்டங்கள்
- நீதிமன்ற முறை
- விவேகச் சொத்துச் சட்டம்
- சர்வதேசச் சட்டதிட்டங்கள்
- நாட்டின் அரசியல் எதிர்பார்க்கை

நாட்டின் கொள்கை, வரி, நிதி, வெளிநாட்டு வியாபாரக் கொள்கை

❖ மத்திய அரசினதும் உள்ளூராட்சி மன்றத்தினதும் செயற்பாடுகள்

## தொழில் நுட்பச் சூழல்

ஆராய்ச்சி அபிவிருத்திக் கருமங்களினால் புதிய கண்டு பிடிப்புக்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

## தொழில் நுட்பச் சூழலக்குரிய பிரதான காரணிகள்

- புதிய கண்டுபிடிப்புக்கள்
- ஆராய்ச்சி அபிவிருத்திக் கருமங்கள்
- விரைவான தொழில் நுட்ப மாற்றம்
- தொழில் நுட்ப மாற்றத்தினால் ஏற்படும் பிரச்சினைகள்
- தொழில் நுட்பச் சூழலின் பிரதான பண்புகள்
- புதிய வணிகச் சந்தர்ப்பங்கள் தோன்றுதல்
- பொருள்களும் சேவைகளும் விரைவாக காலங்கடந்தனவாதல்
- அடிக்கடி மாற்றங்கள் எற்பட்டுக் கொண்டிருத்தல்
- செயற்பாட்டுக் கருமங்களுக்கு நேரடியான சவாலாக அமைதல்
- தொழில் நுட்பச் சூழலின் மாற்றம் வணிகங்களுக்கு அனுகூலமாகவும் பிரதிகூலமாகவும் அமைய முடியும்.

## வலுச் சக்திப் பிரச்சினை

இப்பொழுது நிலவும் வலுசக்தியின் போக்கும் அதிக பாவனையும் காரணமாக எதிர்காலத்தில் வலுக்சக்தி மூலங்கள் அருகிவிடுதல் அல்லது இல்லாமல் போதல், நட்ட அச்சங்கள் காரணமாக அவற்றின் விலை உயர்வடைதல் வலுச்சக்தி பிரச்சினை எனக் கருதப்படுகின்றது.

## இலங்கையில் எரிபொருள் பிரச்சினைக்கான தீர்வுக்குரிய செயல்முறைகள்

❖ அனல் மின்நிலையங்களை அமைத்தல்
❖ மாற்று எரிசக்தி மூலங்களில் அக்கறை கொள்ளுதல்
❖ எரிபொருள் சேதமடைதலைக் குறைத்தல்

## எண்ணெய் விலை உயர்வுக்கான காரணங்கள்

❖ இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமானம் வீழ்ச்சியடைதல்
❖ உலகப் பொருளாதாரத்தில் தோன்றியுள்ள பிரச்சினை நிலைமை
❖ மோசமான காலநிலை காரணமாக எண்ணெய் வழங்கலுக்கு ஏற்பட்ட தடை
❖ மேற்கு நாடுகளில் பொருள் மூலங்களுக்கான கேள்வி உயர்வு
❖ தென்னமெரிக்க நாடுகளில் காணப்படும் அரசியல் உறுதியற்ற நிலைமை

### அமுக்கக் குழுக்கள்

வணிக நிறுவனத்தில் அனுகூலமான அல்லது பிரதிகூலமான தாக்கத்தை ஏற்படுத்தும் வெவ்வேறு கருமங்களில் ஈடுபட்டுச் செயற்படும் குழுக்கள் அமுக்கக் குழுக்கள் என இனங்காட்டப்படும்.

Eg:- நுகர்வோர் அமைப்புக்கள்

சூழல் அமைப்புக்கள்

சமய அமைப்புக்கள்

## விவேகச் சொத்துக்கள்

### இலங்கையில் விவேகச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள்

- 1979 இலக்கம் 52 கொண்ட விவேகச் சொத்துச் சட்டம்
- 2000 இலக்கம் 40 கொண்ட விவேகச் சொத்து(திருத்தச்) சட்டம்
- 2003 இலக்கம் 36 கொண்ட விவேகச் சொத்துச் சட்டம்

### விவேக சொத்துச் சட்டத்தினால் பாதுகாக்கப்படும் உரிமைகள்

- வெளியீட்டு உரிமை
- கைத்தொழில் திட்டம் பற்றிய உரிமை
- பேற்றன் உரிமை
- வியாபாரக்குறி சேவைக்குறி பற்றிய உரிமை

### வெளியீட்டு உரிமை

ஏதாவது செயற்கையான ஆக்கத்தைச் செய்தவருக்கு அல்லது எழுத்தாளருக்கு அவருடைய ஆக்கத்தை வெயியிடுவதற்கு மொழிபெயர்ப்பதற்கு மக்களுக்கு முன்வைப்பதற்கு மற்றொருவருக்கு ஒப்படைப்பதற்கு உள்ள உரிமை.

### பேற்றன் உரிமை

ஒரு புத்தாக்கத்தைச் செய்தவர் குறித்த கால எல்லைக்குள்ளே அதனை மற்றொருவருக்கு ஒப்படைக்கவும், அதற்கான ஒப்பந்தங்களைச் செய்யவும் தனி உரிமை அளிக்கும் சான்றை அரசு வழங்குவதால் கிடைக்கும் உரிமை

### கைத்தொழில் திட்டம் பற்றிய உரிமை

கைத்தொழில் அல்லது குடிசைத்தொழில் ஆக்கங்களுக்கு விசேட தோற்றத்தைத் தரும் வடிவமைப்பைக் கொடுக்கக் கூடிய திட்டம் இவ்வாறு குறிப்பிடப்படும். இது கைத்தொழில் திட்டத்தை ஆக்கியவர் அதனைப் பயன்படுத்துவதற்கு அரசினால் வழங்கப்படும் உரிமையாகும்.

### வியாபாரக்குறி, சேவைக்குறி தொடர்பான உரிமைகள்

ஒருவருடைய உற்பத்தியை மற்றவருடைய உற்பத்தியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக பயன்படுத்தப்படும் கட்புலனாகும் குறி வியாபாரக்குறி எனப்படும்.

### பேற்றன் உரிமையின் முக்கியத்தவம்

- புதிய ஆக்கங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஊக்குவிப்பை அளித்தல்
- பேற்றன் உரிமையை விற்று விலைபெற முடிதல்
- பேற்றன் உரிமைநிதி அடிப்படையில் பாதுகாக்கப்படுதல்

### பேற்றன் உரிமை அளிக்கப்படாத புதிய கண்டுபிடிப்புக்கள்

- விஞ்ஞான நிகழ்வுகளும் கணியமுறை வெளிப்பாடுகளும்
- வணிகக் கருமங்களைச் செய்தல்
- புதிய பரிகார முறை
- புதிய நிலையில் தாவர வகை

### வியாபாரக்குறி, சேவைக்குறி என்பவற்றின் தேவை

- உரிமையாளருடைய பொருள் அல்லது சேவையை மற்றவருடைய பொருள்கள் சேவையிலிருந்து வேறுபடுத்திக்காட்டுதல்
- பொருள் அல்லது சேவையின் வழிமுறையைக் காட்டுதல்
- பொருள் அல்லது சேவையின் தரத்தைக் காட்டுதல்
- நுகர்வோர் இலகுவாக இணங்காண உதவுதல்
- உரிமையாளரின் மதிப்பை உயர்த்துவதற்கு உதவுதல்

## வியாபாரக் சேவைக்குறிகள் சட்டவிரோதமாகும் சந்தர்ப்பங்கள்

- பொதுமக்களை ஏமாற்றுதல்
- நியாயமான போட்டிக்கொதிராக அமைதல்
- மூன்றாந் தரப்பினரின் உரிமைக்குப் பங்கம் விளைவித்தல்
- ஏனைய முயற்சியாளர்களின் பண்டங்கள் சேவைகளில் இருந்து வேறுபடுத்த உதவாமை.

## இலங்கையில் காணப்படும் பிரதானமான சூழல் பிரச்சினைகள்

- சனத்தொகை அதிகரிப்பு
- வறுமையின் அதிகரிப்பு
- விலைமட்ட உயர்வு
- சூழல் மாசடைதல்
- அரசியல் ஊழல்

## சூழல் மாசடைதல்

வணிகங்களாலும் வீடுகளாலும் அகற்றப்படும் குப்பை கூழங்கள் கழிவுகள் இலங்கையில் சூழல் மாசடைவுக்கு காரணமாக உள்ளன. இதனால் கழிவு முகாமைத்துவம் இன்று வணிகங்களிலும் வீடுகளிலும் இடம்பெறுவதை உறுதி செய்தல் அரசின் கடமையாகும்.

## கழிவு முகாமைத்துவத்திற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

1. வீசப்படும் கழிவுகளை குறைத்தல்
2. கொள்கலன்களை மீண்டும் மீண்டும் பாவனைக்குரியதாக்குதல்
3. சுழற்சி முறைக்கு உட்படுத்தல்
4. கழிவகற்றலை முறைப்படி நடத்துதல்

## நுகர்வோர் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள்

1. அவசியமில்லாத நுகர்வைத் தடுத்தல்
2. மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடியவற்றைப் பாவனைக்கு எடுத்தல்
3. குப்பை கூழங்களை முறையாக அகற்றுதல்
4. சூழலுக்கு மாசு ஏற்படுத்தல் பற்றி பொறுப்புடையவர்களுக்கு அறிவிப்புச் செய்தல்

### வணிகர்கள் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள்

1. கழிவுப்பொருட்களை முகாமை செய்தல்
2. பச்சைப் பொருள் உற்பத்தியில் ஈடுபடல்
3. சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தும் செயற்பாடுகளைத் தவிர்த்தல்
4. சூழலுக்கு மாசு ஏற்படாவண்ணம் தமது உற்பத்தி கருமங்களைத் திட்டமிடல்

### பச்சை உற்பத்தி

சூழலுக்கு இணக்கமாக சூழல் மாசு குறைவடையும் முறையில் உற்பத்தியாக்கப்பட்ட பொருட்கள் பச்சை உற்பத்தி எனப்படும் உக்கிப் போகக் கூடிய முறையில் தயாரிக்கப்படும் கொள்கலன்களை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

### வணிகங்கள் பச்சை உற்பத்தி தொடர்பில் தூண்டப்படுதலுக்கான காரணங்கள்

- ✓ வணிகங்களின் சமூகப் பொருப்புப்பற்றி அக்கறைகொள்ளச் செய்தல்
- ✓ சூழல் பாதுகாப்பு பற்றி உலக அக்கறையை விரிவடையச் செய்தல்
- ✓ வாடிக்கையாளர் பச்சை உற்பத்திகளைக் கொள்வனவு செய்யத் தூண்டுதல்
- ✓ வணிகங்களுக்கிடையில் உள்ள உக்கிரமான போட்டியை எதிர்கொள்ள வேண்டிய தேவை
- ✓ சூழல் அமைப்புக்கள் உட்பட மக்களிடமிருந்து வணிகங்களுக்கு அழுத்தம் ஏற்படுத்தல்
- ✓ காலத்துக்குக் காலம் அரசினால் நிறைவேற்றப்படும் சட்டதிட்டங்களை அமுலாக்கல்

### பபசஅ பகுப்பாய்வு (SWOT Analysis)

வணிகச் சூழலில் பலம், பலவீனம், சந்தர்ப்பம், அச்சுறுத்தல்களை இனங்காணுவதற்காக செய்யப்படும் மதிப்பீடு பபசஅ பகுப்பாய்வு எனப்படும். விசேடமாக அகச் சூழலில் பலமும் பலவீனமும் புறச்சூழலில் சந்தர்ப்பமும் அச்சுறுத்தலும் இப்பகுப்பாய்வு மூலமாக இனங்காணப்படும்.

### பபசஅ பகுப்பாய்வின் தேவை

- ✓ வணிகத்தின் பலத்தை இனங்காணமுடிவதால் உச்சப்பயனைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் உருவாகுதல்
- ✓ வணிகத்தின் பலவீனத்தை அறிந்த கொள்ள முடிவதால் குறைபாடுகளை அகற்றி திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்

- ✓ புறச் சூழலில் உள்ள சந்தர்ப்பங்களை இனங்கண்டு அவற்றை வணிகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடிதல்
- ✓ புறச் சூழலில் உள்ள அச்சுறுத்தல்களை இனங்கண்டு அதனை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் ஆற்றலை உருவாக்கிக்கொள்ள முடியும்

ஆக்கம்:- தி.புஸ்பரூபன்

**A/L (2014) வர்த்தகப் பிரிவு**

## வணிகக் கல்வி

### வினா விடைகள்

1.உற்பத்தியை எத்தனை வகைப்படுத்தலாம்? அவை எவை?

- ❖ மூன்று
  - ➢ பொருட்கள்
  - ➢ சேவைகள்
  - ➢ எண்ணங்கள்

2.பௌதீக நிலைப்பாட்டினை கொண்டவற்றை எவ்வாறு அழைப்பர்?

- ❖ பொருட்கள்

3.பௌதீக நிலைப்பாட்டினை கொண்டிராதவை எவ்வாறு அழைப்பர்?

- ❖ சேவைகள்

4.நுகர்வோர் என்றால் என்ன?

- ❖ உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சேவைகள், எண்ணங்கள் என்பவற்றை. நுகர்வு செய்வோர் அல்லது பயன்படுத்துவோர் நுகர்வோர் ஆவார்

5. உற்பத்தி என்றால் என்ன?

- ❖ நுகர்வுத் தேவைக்கேற்ப கிடைக்கப் பெறும் வளங்களை மாற்றத்திற்கு உற்படுத்திஅவ் வளங்களுக்கு பெறுமதியைச் சேர்ப்பது உற்பத்தி எனப்படும்.

6. உற்பத்தியின் நோக்கம் யாது?

- ❖ மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதாகும்

7.உற்பத்தியின் மூன்று பிரிவுகளும் எவை?

- ❖ முதலாம் நிலை உற்பத்தி

❖ இரண்டாம் நிலை உற்பத்தி
❖ மூன்றாம் நிலை உற்பத்தி

8. முதலாம் நிலை உற்பத்தி என்றால் என்ன?

❖ இயற்கையாக கிடைக்கப்பெறும் வளங்களை அதே வடிவில் அகழ்ந்தெடுப்பது முதலாம் நிலை உற்பத்தி எனப்படும்

9. இரண்டாம் நிலை உற்பத்தி என்றால் என்ன?

❖ முதலாம் நிலை உற்பத்தி மூலம் பெறப்படும் மூலப்பொருட்கள் அல்லது ஆரம்ப பொருட்களை மாற்றத்திற்கு உற்படுத்தி முடிவுப் பொருட்களாக ஆக்குவது.

10. இரண்டாம் நிலை உற்பத்தியின் பிரிவுகள் எவை?

❖ பொருள் உற்பத்தி
❖ நிர்மாண உற்பத்தி

11. மூன்றாம் நிலை உற்பத்தியை வேறு எவ்வாறு அழைப்பர்?

❖ சேவை உற்பத்தி

ஆக்கம்
வி.விதுசன்
தரம் 10

# பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகள்

பொருளாதார வளர்ச்சிகளின் தூண்டற் காரணிகள் பலவாகும். அவைத் தனித்தனியாகவும் ஒன்றிணைந்தும் பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவாய் அமைகின்றன. பின்வருமாறு அவற்றை நாம் வகைப்படுத்தலாம்.

1. வளத்திரட்சியில் ஏற்படும் அதிகரிப்பு
    1. இயற்கை வளங்கள்
    2. மனித மூலதனம்
    3. பௌதீக மூலமனம்
    4. சமூக மூலதனம்
2. விளைத்திறன் அதிகரிப்பு
3. முயற்சியாண்மைத்திறன் முன்னேற்றம்
4. சொத்துரிமைக் கட்டமைப்பு
5. பொருளாதாரச் சுதந்திரம்
6. தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள்
7. பொருளாதார உறுதிப்பாடு
8. பொருத்தமான ஊக்குவிப்புக் கட்டமைப்பு
9. நல்லாட்சி
10. அரசியல் உறுதிப்பாடு

## வளத்திரட்சியில் ஏற்படும் அதிகரிப்பு

### 1. இயற்கை வளங்கள்

இயற்கையின் கொடைகளாகவுள்ள உற்பத்திக்குப் பயன்படும் வளங்கள் இயற்கை வளங்களாகும். இவற்றின் கிடைப்பனவு பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும். எவ்வாறாயினும் இயற்கை வளங்கள் மிகவும் வரையறுக்கப்பட்டவையாகும். புதிதாக ஒரு இயற்கை வளம் கண்டுபிடிக்கும் பொழுது அது அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நேர்கணியமானதொரு பங்களிப்பை வழங்க முடியும். தற்காலத்தில் இயற்கை வளங்கள் அதிகம் இல்லாத நாடுகள் ஏனைய வளங்களை விருத்தி செய்வதன் மூலம் உயர் பொருளாதார வளர்ச்சியை எய்தியுள்ளன.

### 2.மனித மூலதனம்

ஒரு பொருளாதார ரீதியான பெறுமதியை உருவாக்கக் கூடிய வகையில் மனிதனில் உள்ளடங்கியுள்ள திறன்கள், அறிவு, சமூக மற்றும் தனி நபர் சார்ந்த ஆளுமைகள், புத்தாக்க முயற்சி என்பவற்றை உள்ளடக்கிய முழுமை மனித மூலதனம் எனலாம்.

### 3.பௌதீக மூலதனம்

உற்பத்தி செயன்முறையில் பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் மற்றும் இயந்திர சாதனங்கள், உபகரணங்கள், கட்டடங்கள் போன்றன பௌதீக முலதனம் எனப்படுகின்றன. புதிய முதலீடுகள் மூலம் பௌதீக மூலதனம் அதிகரிக்கின்றது. மூலதனம் ஒரு நிலையான காரணியாகும். இதன் அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியைத்தூண்டும். மூலதனம் உற்பத்தியில் பயன்படுத்தும் போது பெறுமானத் தேய்வுக்கு உட்படும்.

### 4.சமூக மூலதனம்

சமூகமொன்றின் சமூக இடைத்தொடர்புகளை வடிவமைக்கும் நிறுவன ரீதியான ஒழுங்கமைப்புக்கள், உறவாடல்கள் மற்றும் வழக்காறுகள் போன்றவற்றின் தொகுப்பு சமூக மூலதனமெனப்படும். இத்தகைய மூலதனம் தனிநபர்களும் சமூகமும் தமது நடவடிக்கைகளை இலகுவாகவும் சௌகரியமாகவும் மேற்கொள்ள உதவும். உற்பத்தி திறன் உயரவும், உற்பத்தி அதிகரிக்கவும் ஏதுவாவதனால் மனித மூலதன முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சி ஏற்பட அத்தியாவசியமாகும்.

## சந்தர்ப்பச் செலவு

இன்று நான் வேலைக்கப் போக வேண்டுமா? உயர் கல்வியை முடித்த பின் நான் பல்கலைக்கழகத்திற்கு போக வேண்டுமா? அரசாங்கம் அதிகளவு நிதியினை பாதுபாப்பிற்காக ஒதுக்க வேண்டுமா? போன்ற அனைத்தும் தினந்தோறும் எம்மால் விடை காணப்பட வேண்டிய சில வினாக்களாகும். எனினும் மேற்குறிப்பிடப்பட்ட வினாக்கள் தொடர்பாக நாம் எமது தீர் மானங்களை மேற்கொள்ளும் போது அத் தீர்மானங்களுக்கான செலவு யாது? வேலைக்குப் போவதற்கான செலவு யாது? பல்கலைக்கழகத்திற்குப் போவதற்கான செலவு யாது? அல்லது பல்கலைக்கழகத்திற்குப் போகாமல் விடுவதற்கான செலவு யாது? இறுதியாக, பாதுகாப்பிற்காக அதிகளவு நிதியினை அரசாங்கம் ஒதுக்குவதற்கான செலவு யாது? அல்லது பாதுகாப்பிற்காக அதிகளவு நிதியினை அரசாங்கம் ஒதுக்காமல் விடுவதற்கான செலவு யாது? பொருளியலில் இத்தகைய செலவுகள் சந்தர்ப்பச்செலவு என அழைக்கப்படுகின்றது.

ஒரு தெரிவினை நிறைவேற்றுவதற்காக இன்னொரு தெரிவினை விட்டுக் கொடுக்கும் போது அவ் விட்டுக் கொடுக்கப்படும் குறிப்பிட்ட தெரிவிற்கு ஏற்படும் செலவே சந்தர்ப்பச் செலவாகும். விட்டுக்கொடுப்பதற்கு பல மாற்றீடுகள் காணப்பட்ட போதும் மிக உயர்ந்த பெறுமதியுடைய மாற்றீட்டுக்கான செலவே சந்தர்ப்பச் செலவாகும். அந்த வகையில் ஒரு நடவடிக்கைக்கான சந்தர்ப்பச் செலவு என்பது உயரளவு பெறுமதியுடைய ஒரு மாற்றீட்டினை விட்டுவிடுதலாகும்.

உற்பத்தி சாத்திய வளையியினைப் பயன்படுத்தி சந்தர்ப்பச் செலவு என்ற எண்ணக்கருவினை மிகவும் சிறப்பாக விளக்க முடியும். உற்பத்தி சாத்திய வளையியின் மீது இரண்டு பொருள்கள் தொடர்பான உற்பத்தி விளக்கப்படுவதால் அங்கு ஒரு மாற்றீடு மாத்திரம் விட்டுவிடப்படுகின்றது. அதாவது ஏனைய பொருளில் சில தொகை உற்பத்தி செய்யப்படாமல் விட்டுவிடப்படுகின்றது.

## அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள்

அருமையான மாற்றுப்பயனுடைய வளங்களைக் கொண்டு எல்லையற்ற தேவைகளை நிறைவு செய்ய முற்படும் போது சகல நாடுகளினாலும் எதிர் நோக்கப்படுகின்ற பின்வரும் தெரிவுப் பிரச்சனைகளே அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எனப்படும்.

அவையாவன

1. எதனை உற்பத்தி செய்வது? எந்தளவில் உற்பத்தி செய்வது?
2. எவ்வாறு உற்பத்தி செய்வது?
3. யாருக்காக உற்பத்தி செய்வது?

## பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகள் தோன்றக் காரணங்கள்

1. மனித தேவைகள் எல்லையற்றதாக அமைதல்
2. வளங்கள் வரையறுக்கப்பட்டதாகவும் அருமையாகவும் அமைதல்
3. வளங்களுக்கு மாற்றுப் பயன்பாடு காணப்படுதல்

## அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முறைகள்

1. முதலாளித்துவம் - விலைப்பொறிமுறை
2. சமதர்மம் - மத்திய திட்டமிடல் குழு
3. கலப்பு பொருளாதாரம் - விலைப் பொறிமுறையும் மத்திய திட்டமிடும் குழுவும்

## பொருளாதாரப் பொதுப் பிரச்சினைகள்

பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக சகல நாடுகளாலும் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளே பொருளாதாரப் பொதுப் பிரச்சினையாகும். அவையாவன.

1) வறுமை, போசாக்கின்மை
2) வேலையில்லாப் பிரச்சினை
3) மூலதனப் பற்றாக்குறை
4) சூழல் மாசடைதல்
5) சனத்தொகைப் பெருக்கம்
6) இயற்கை அனர்த்தம்
7) நாணயப் பெறுமதி குறைதல்
8) தொழில் நுட்பம் போதாமை
9) அதிகரிக்கும் பாதுகாப்புச் செலவு
10) எயிட்ஸ் நோய்

**ப.லக்சன்**

**கலைப் பிரிவு**

(2014)

# Teacher Mr.S.Sathiyasaibaba -31

<table>
<tr><th></th><th>1<br>8:25 - 9:05</th><th>2<br>9:05 - 9:45</th><th>3<br>9:45 - 10:25</th><th>4<br>10:25 - 11:05</th><th>5<br>11:05 - 11:45</th><th>Interval<br>11:45 - 12:10</th><th>6<br>12:10 - 12:50</th><th>7<br>12:50 - 13:30</th><th>8<br>13:30 - 14:10</th></tr>
<tr><td>Monday</td><td colspan="2">Eco<br>13C</td><td>His<br>6B</td><td colspan="2">Eco<br>12C</td><td rowspan="5"></td><td>Bus/Geo/Civ<br>11A<br>11B</td><td>Bus/Geo/Civ<br>10A<br>10B</td><td>Proja<br>13C</td></tr>
<tr><td>Tuesday</td><td colspan="2">Eco<br>13C</td><td>Eco<br>12C</td><td>Geo<br>9B</td><td>Bus/Geo/Civ<br>10A<br>10B</td><td></td><td></td><td>Bus/Geo/Civ<br>11A<br>11B</td></tr>
<tr><td>Wednesday</td><td colspan="2">Eco<br>13C</td><td colspan="2">Eco<br>12C</td><td>His<br>9B</td><td>Eco<br>12C</td><td>Geo<br>9B</td><td></td></tr>
<tr><td>Thursday</td><td colspan="2">Eco<br>13C</td><td></td><td colspan="2">Eco<br>12C</td><td>His<br>9B</td><td></td><td>His<br>6B</td></tr>
<tr><td>Friday</td><td colspan="2">Eco<br>13C</td><td></td><td>Bus/Geo/Civ<br>10A/<br>10B</td><td>Eco<br>12C</td><td></td><td>Bus/Geo/Civ<br>11A/<br>11B</td><td>Eco<br>12C</td></tr>
</table>

Timetable generated:6/15/2015

aSc Timetables

16/6/2015

# சந்தைஅமைப்புக்கள்

## சந்தை

கொள்வனவாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் கொள்வனவு விற்பனை தொடர்பாக தமக்குள் ஏற்படுத்திக் கொள்கின்ற ஓர் ஏற்பாடு அல்லது உடன்பாடு சந்தை எனப்படுகின்றது.

பொருளியல் ஆய்வில் பின்வரும் சந்தைகள் முக்கியமாகவுள்ளது.

1. பொருட் சந்தை
2. காரணிச் சந்தை
3. நிதிச் சந்தை

## பொருட்சந்தை

கேள்வியாளருக்கும் நிரம்பலாளருக்கம் முடிவுப் பொருட்கள் சேவைகளை கொள்வனவு விற்பனை செய்யும் நோக்குடன் தமக்குள் ஏற்படுத்திக் கொள்கின்ற ஓர் ஏற்பாடு பொருட்சந்தை எனப்படும்.

பொருட்சந்தையை பின்வருமாறு வகைப்படுத்தலாம்

1. நிறைபோட்டிச் சந்தை
2. தனியுரிமைச் சந்தை
3. தனியுரிமைப் போட்டிச் சந்தை
4. சிலருரிமைச் சந்தை

## காரணிச் சந்தை

நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகிய உற்பத்திக் காரணிகளை கொள்வனவு , விற்பனை செய்யும் நோக்குடன் காரணிக் கொள்வனவாளர்களுக்கும் நிரம்பலாளர்களும் தமக்குள் ஏற்படுத்திக் கொள்கின்ற ஏற்பாடு காரணிச் சந்தையாகும்.

## நிதிச்சந்தை

நிதி தொர்பாக கொடுக்கல் வாங்கல்களுக்கான கேள்வியாளரும் நிரம்பலாளரும் தமக்குள் ஏற்படுத்திக் கொள்கின்ற ஏற்பாடு நிதிச் சந்தை ஆகும்.

நிதிச் சந்தை இரண்டு வகைப்படும்

1. பணச் சந்தை
2. மூலதனச் சந்தை

## நிறைபோட்டிச் சந்தை

எண்ணிறைந்த உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களும் ஒரே தன்மை வாய்ந்த பொருட்கள் சேவைகளை விற்பனை கொள்வனவு செய்ய தமக்குள் ஏற்படுத்திக் கொள்கின்ற ஓர் ஏற்பாடாக நிறைபோட்டிச் சந்தை உள்ளது. இச் சந்தை பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

1. எண்ணற்ற உற்பத்தியாளர்கள் காணப்படுவர்
2. எண்ணற்ற நுகர்வோர்கள் காணப்படுவர்
3. நுகர்வோருக்கும் விற்பனையாளர்களுக்கும் சந்தை பற்றிய பூரண அறிவு உண்டு
4. ஒரே தன்மை வாய்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் இதனால் பண்டங்கள் பூரண பதிலீட்டுத் தன்மையைக் கொண்டவை.
5. அரச தலையீடுகள் இருக்கமாட்டாது
6. மூலவளங்கள் இடம் பெயரக் கூடியவை

## நிறைபோட்டி நிறுவனமொன்றினது சமநிலை

நிறுவனமொன்று தனது உற்பத்தியினை விரிவுபடுத்தவோ அல்லது குறைக்கவோ முடியாத நிலைமை நிறுவனத்தின் சமநிலை எனப்படுகின்றது. ஒரு நிறுவனம் சமநிலை அடைவதற்கு இரு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

1. எல்லை வருமானமும் எல்லைச் செலவும் சமனாயிருக்க வேண்டும்
2. எல்லை வருமானக் கோட்டினை எல்லை செலவுக்கோடு கீழிருந்து மேல்நோக்கிச் சென்று வெட்ட வேண்டும்

நிறை போட்டி நிறுவனமொன்றின் சமநிலையினை இரண்டாக பிரித்து ஆராய முடியும்

1. குறுங்காலச் சமநிலை
2. நீண்ட காலச் சமநிலை

குறுங்கால நிறைபோட்டி நிறுவனமொன்றின் சமநிலையில்

1. அசாதாரண இலாபம்
2. சாதாரண இலாபம்
3. நட்டம்

என்னும் முன்று நிலைமைகளிலும் யாதாயினும் ஒரு தன்மை காணப்படும்

## அசாதாரண இலாபம்

சராசரி வருமானத்தினை விட சராசரிச் செலவு குறைவாகயிருக்கும் போது அசாதாரண இலாபம் கிடைக்கும். இச் சமநிலையின் போது **MR = AR = MC > AC** எனும் நிலைமை காணப்படும்.

## சாதாரண இலாபம்

சராசரி வருமானமும் சராசரிச் செலவும் சமனாயிருக்கும் போது சாதாரண இலாபத்தினை குறுங்காலத்தில் ஓர் நிறுவனம் பெற்றுக் கொள்ளும். நிறைபோட்டி நிறுவனமொன்று சாதாரண இலாபத்தினை பெற்று சமநிலையடையும் போது **AR = MR = MC = AC** எனும் நிலைமையே காணப்படும்.

## நட்டம்

குறுங்காலத்தில் உற்பத்தி நிறுவனமொன்று சராசரி வருமானத்தினை விட சராசரி செலவினை அதிகமாக கொண்டிருக்கும் போது நட்டமடைகிறது. நட்டரீதியான சமநிலையில் **AR = MR = MC < AC** என்னும் நிலைமை காணப்படும்.

## தனியுரிமைச் சந்தை

தனியுரிமைச் சந்தையின் சிறப்பியல்புகளா பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. ஒரு உற்பத்தி நிறுவனம் அல்லது விற்பனை நிறுவனம் சந்தையில் காணப்படும் அதே நேரம் ஏராளமான நுகர்வோர்களும் காணப்படுவார்
2. இச் சந்தையில் உள்ள நுகர்வோர்கள் சந்தை பற்றிய முழுமையான அறிவினைக் கொண்டிருப்பதில்லை
3. பிரவேசச் சுதந்திரம் காணப்படமாட்டாது
4. ஒரு நிறுவனம் மட்டும் உள்ளதால் நிறுவன நிரம்பல்தான் சந்தை நிரம்பலாக காணப்படும்.
5. தனியுரிமை நீண்டகாலத்தில் அசாதாரண இலாபத்தை உழைக்கும்.

### தனியுரிமை தோன்றக் கூடிய சூழ்நிலைகள்

- மூலப்பொருட்களின் உடமை தனி ஒரு நிறுவனத்திடம் இருத்தல்
- ஒரு நிறுவனம் விசேட தொழில்நுட்பத் திறனைக் கொண்டிருத்தல்
- ஆக்கவுரிமை, பதிப்புரிமை ஒரே ஒரு நிறுவனத்திடம் காணப்படல்
- அரசின் சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்
- பாரம்பரிய விளம்பரம் தொடர்ச்சியான உற்பத்தி பேதப்படுதல்

## தனியுரிமைப் போட்டிச் சந்தை/ முற்றுரிமைப் போட்டிச் சந்தை

இச் சந்தை அமைப்பு **prof F.H.Champerlin** என்பவராலும் **Miss joan Robinson** என்பவராலும் அறிமுகப்படுத்தப்பட்டது. நிறைபோட்டி தனியுரிமை சந்தைகளின் நடைமுறைப் பொருத்தப்பாட்டினைவிட இச் சந்தையின் நடைமுறை இயல்பு அதிகமாகவுள்ளது. தனியுரிமைப் போட்டிச் சந்தையானது நிறைபோட்டியின் கூடுதலான இயல்புகளையும் தனியுரிமையின் குறைவான இயல்புகளையும் கொண்டுள்ளது.

இச் சந்தையின் பண்புகள் வருமாறு

1. எண்ணற்ற உற்பத்தி/விற்பனை நிறுவனங்கள் காணப்படும்

2. நிறுவனங்கள் சந்தையில் உள் நுழையவும் வெளியேறவும் சுதந்திரம் உண்டு
3. நுகர்வோர்கள் சில விற்பனையாளருடன் நெருங்கிய தொடர்பினை வைத்திருப்பர்
4. சந்தைபற்றிய பூரண அறிவு நுகர்வோர்களுக்கும் விற்பனையாளருக்கும் இருக்காது
5. விற்பனையில் போட்டியும் பொருள்வேறாக்கல் தன்மையும் உள்ளதால் விளம்பரம் இச் சந்தைக்கு அவசியமானதாகும்
6. இச் சந்தையில் ஒரு பொருளுக்கு ஒரே விலை நிலவாது

## சிலருமைச் சந்தை

நடைமுறையுலகின் இயல்புகளை பிரதிபலிக்கும் சந்தை அமைப்பாக இச் சந்தை விளங்குகின்றது.

சிலருரிமையின் இயல்புகள் வருமாறு:-

1. சில உற்பத்தி விற்பனை நிறுவனங்கள் காணப்படும்.
2. புதிய நிறுவனங்கள் தொழிலுக்குள் உள் நுழைவதற்குத் தடையுண்டு.
3. நீண்ட காலத்தில் இங்குள்ள நிறுவனம் அசாதாரண இலாபத்தினை பெற்றுக் கொள்ள முடியும்.
4. முறிவு பட்ட கேள்விக் கோட்டில் சமநிலை விலை வெளியீடு என்பன தீர்மானிக்கப்படும்.

# அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள்

அருமையான மாற்றுறுப்பயனுடைய வளங்களைக் கொண்டு எல்லையற்ற தேவைகளை நிறைவு செய்ய முற்படும் போது சகல நாடுகளினாலும் எதிர் நோக்கப்படுகின்ற பின்வரும் தெரிவுப் பிரச்சனைகளே அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எனப்படும்.

அவையாவன

1.எதனை உற்பத்தி செய்வது? எந்தளவில் உற்பத்தி செய்வது
2.எவ்வாறு உற்பத்தி செய்வது?
3.யாருக்காக உற்பத்தி செய்வது?

## பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகள் தோன்றக் காரணங்கள்

மனித தேவைகள் எல்லையற்றதாக அமைதல்

வளங்கள் வரையறுக்கப்பட்டதாகவும் அருமையாகவும் அமைதல்

வளங்களுக்கு மாற்றுப் பயன்பாடு காணப்படுதல்

## அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முறைகள்

முதலாளித்துவம் - விலைப்பொறிமுறை

சமதர்மம் - மத்திய திட்டமிடல் குழு

கலப்பு பொருளாதாரம் - விலைப் பொறிமுறையும் மத்திய திட்டமிடும் குழுவும்

## பொருளாதாரப் பொதுப் பிரச்சினைகள்

பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக சகல நாடுகளாலும் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளே பொருளாதாரப் பொதுப் பிரச்சினையாகும். அவையாவன.

1. வறுமை, போசாக்கின்மை
2. வேலையில்லாப் பிரச்சினை
3. மூலதனப் பற்றாக்குறை
4. சூழல் மாசடைதல்
5. சுனத்தொகைப் பெருக்கம்
6. இயற்கை அனர்த்தம்
7. நாணயப் பெறுமதி குறைதல்
8. தொழில் நுட்பம் போதாமை
9. அதிகரிக்கும் பாதுகாப்புச் செலவு
10. எயிட்ஸ் நோய்

ஆக்கம்:-

கோ.அரவிந்தன்

(2014) வர்த்தகப் பிரிவு

# 2007ம் ஆண்டு கம்பனிச் சட்டம்

## பழையன கழிதல்

- கம்பனியின் ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை ஒன்றுக்கு மேல் என்ற நியதி நீங்கி, இழிவளவு உறுப்பினர் தொகை சொந்தக் கம்பனி, பொதுகம்பனிகள் ஒன்று என குறிப்பிடப்படுகின்றது.

- பொதுகம்பனியில் ஒன்று வணிக நடவடிக்கையினை ஆரம்பிக்க உருவாக்கல் பத்திரத்துடன், வியாபார ஆரம்ப பத்திரமும், பெறவேண்டிய தேவை தவிர்க்கப்பட்டு உருவாக்கல் பத்திரம் மட்டும் போதுமானது என விரிந்துரைக்கப்படுகின்றது

- கூட்டிணைத்தலுக்காக பதிவாளருக்கு சமர்ப்பிக்கவேண்டிய அமைப்பு புற விதி பத்திரம், சட்டப் பரகடனம், பேரளவு மூலதன கூற்று தேவையற்றதாகிவிட்டது

- மக்கள் கம்பனிகள் உம் ஒரு வகைக் கம்பனி அதன் தோல்வி காரணமாக அகற்றப்பட்டு விட்டது அல்லது பொதுக்கம்பனியாக அவை மாற்றியமைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது.

- சட்ட முறைக் கூட்டம் என்ற சட்டப்படி கட்டாயமான கூட்டமொன்று நீக்கப்பட்டு விட்டது.

- அமைப்பு புற விதிப்பத்திரத்தில் காணப்பட்ட நோக்கச்சரத்து அமைப்பு அகவிதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது

- பங்கொன்றின் பேரளவுப் பெறுமதி என்பது நீக்கப்பட்டுள்ளது. தற்போது பங்கொன்றின் பெறுமதி விலையானது "பிரதிபயன்" என அழைக்கப்படுகிறது.

- கம்பனியொன்றின் மூலதனத்தைக் குறைப்பதற்கு நீதிமன்றத்திடம் அனுமதி பெற வேண்டியிருந்தது. தற்போது அது அவசியமற்றதாகிவிட்டது.

- சொந்தக் கம்பனிகள் பதிவாளருக்கு நிதியறிக்கைகளை வருடாந்தம் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டியிருந்த நடைமுறை நீக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் பதிவாளர் கோருமிடத்து சமர்ப்பிக்கவேண்டி வரலாம்.

- கம்பனிகளின் பிரதான பிரிவுகளாக வரையறுத்த கம்பனி,வரையறுக்காத கம்பனி, உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனி என மூன்று பிரிவுகளாக காணப்படுவதுடன், வரையறுத்த கம்பனியின் பிரிவுகளாக சொந்தக் கம்பனி, பொதுக்கம்பனி, கரைகடந்த கம்பனி என மூன்று பிரிவுகள் இனங்காணப்பட்டுள்ளது.

## புதியன புகுதல்

- ✓ ஒற்றைப் பங்குதாரர் கம்பனி, தனியார் பங்குரிமைக் கம்பனி எனும் புதிய கம்பனி அறிமுகப்படுத்தப்பட்டது.இதன் மூலம் "**கம்பனி**" என்ற எண்ணக்கரு விமர்சனத்துக்குரியதாக காணப்படுகின்றது. இது ஒரு வரையறுத்த சொந்தக் கம்பனியாக செயற்பட முடியும்.

- ✓ கடன் தீர்க்கும் ஆற்றல் பரிசோதனை மூலம் கம்பனியின் பொருப்புக்களைத் தீர்க்கும் ஆற்றலை, பங்கிலாபப் பகிர்வுக்கு முன்னர் வெளிப்படுத்தி கம்பனிப்பதிவாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

- ✓ கம்பனியின் அனுமதித்த மூலதனம் என்பது "கூறப்பட்ட வெளிப்படுத்திய மூலதனம்" என மாற்றப்பட்டுள்ளது. பங்கு வழங்கள் தொடர்பாகவும், பங்கு அழைப்பு தொடர்பாகவும் கம்பனிக்கு கிடைத்த, கிடைக்க வேண்டிய எல்லாப்பணங்களின் கூட்டுத்தொகையாகும்.

- ✓ பொதுக்கம்பனிகளை விலை கூறப்பட்ட கம்பனிகள், விலை கூறப்படாத கம்பனிகள் என அடையாளப்படுத்தப்படுவதுடன், விலை கூறப்பட்ட கம்பனியின் பெயருடன; "PLC-Limited" எனும் பதம் சேர்ந்திருப்பது கட்டாயமாக்கப்பட்டது. ஏனையவை "Limited" என குறிப்பிடப்பட வேண்டும்.

- ✓ கம்பனிகளில் ஏற்படக் கூடிய பிணக்குகளைத் தீர்ப்பதற்காக "பிணக்கு தீர்சபையும்", கம்பனிகள் தொடர்பாக அமைச்சுக்கு ஆலோசனைகளை வழங்க "ஆலோசனை ஆணைச்சபையும்" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- ✓ கம்பனியின் உள்ளக நிர்வாகம் தொடர்பாக "மாதிரி அமைப்பு அகவிதிப்பத்திரம்" அறிமுகப்படுத்தப்பட்டது.

1982 (17) கம்பனிச் சட்டமானது 2007ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதியுடன் நிராகரிக்கப்பட்டு அதற்குப்பதிலீடாக 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டம் அமுலாக்கப்பட்டது. ஏற்கனவே பழைய சட்டத்தில் காணப்பட்ட பல்வேறு பட்ட வரையறைகளும், கட்டுப்பாடுகளும் தவிர்க்கப்பட்டு கம்பனிகளில் உருவாக்கம், நிர்வாகம், கணக்காய்வு, கணக்குவைப்பு, கலைப்பு என்பன தொடர்பான இலகு படுத்தல்கள் இடம்பெற்றுள்ளது என கூறமுடியும்.

## இலங்கையின் பங்குசந்தையின் நவீன போக்குகள்

“பொதுக்கம்பனிகளின் பங்குப்பத்திரங்கள் கடனீட்டுப்பத்திரங்களின் கொள்வனவு விற்பனைக்கு உதவும். அமைப்பு பங்குச் சந்தை ஆகும்” இலங்கையின் பங்குச் சந்தை நடவடிக்கைக்குப் பொறுப்பாக “வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்கு பரிவர்த்தனை (CSE) காணப்படுகின்றது

இப் பங்குச் சந்தையில்சாதாரணப் பங்குகள், முன்னுரிமைப்பங்குகள், பங்காணைப்பத்திரம், தொகுதிக்கடன்கள், திறைசேரிமுறிகள் என்பன பரிமாற்றம் செய்யப்படுகின்றது.

### பங்குச் சந்தையின் சுருக்க வரலாறு

- ✓ 1896 - இலங்கையின் பங்குச் சந்தை “பங்குதரகர் சங்கம்” என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.
- ✓ 1904 – பங்குதரகர் சங்கம் எனும் அமைப்பு கொழும்பு தரகர் சங்கமாக மாற்றப்பட்டது
- ✓ 1910 – பங்குச் சந்தை தொடர்பான நியதிகளுக்கு கொழும்பு தரகர் சங்கமாக மாற்றப்பட்டது
- ✓ 1910 – பங்குச் சந்தை தொடர்பான நியதிகளுக்கு கொழும்பு தரகர் சங்கம் 1984 வரை தனியுரிமை வகித்தது
- ✓ 1984 – கொழும்பு வரையறுக்கப்பட்ட பங்குதரகர் சங்கம் அமைக்கப்பட்டது
- ✓ 1987 – பிணையங்கள் பேரவை உருவாக்கப்பட்டது
- ✓ 1990 – வரையறுக்கப்பட்ட கொழும்பு ஆவண மாற்றுக் கம்பனி, வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்கு பரிவர்த்தனையாக மாற்றப்பட்டது
- ✓ 1991 – மத்தி வைப்பக திட்ட முறைமை (CDS) உருவாக்கப்பட்டது
- ✓ 1991 – பங்கு பரிமாற்றத்தில் தன்னியக்கதீர்வக முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது1995 – பங்கு
- ✓ பரிமாற்றம் உலக வர்த்தக மையத்திற்கு (WTC) மாற்றப்பட்டது
- ✓ 1996 – 100வது ஆண்டுப்பூர்தியும், பலகைமுறை அறிமுகம்
- ✓ 1997 - இலத்திரனியல் திரைவியாபாரம் அறிமுகப்படுத்தப்பட்டது
- ✓ 1998 – கொழும்பு பங்குபரிமாற்றம் (C.S.E) உலகப்பங்கு பரிமாற்றாக சம்மேளனத்தின் 52வது உறுப்புரிமை பெற்றது
- ✓ 1999 - Milanka price Index அறிமுகப்படுத்தப்பட்டது
- ✓ 2000 – தெற்காசிய பங்குப்பரிமாற்றத்தில் உறுப்புரிமை பெற்றது
- ✓ 2001 – பங்கு பரிவர்த்தனைக்கென தனியாக ஆரம்பிக்கப்பட்டது
- ✓ 2004 – அரச பிணை வியாபார முறைமை (OEBT Secvities Trading Systems) DEX – Market எனும் பெயரில் அறிமுகமானது.
- ✓ பங்குதாரர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது
- ✓ Default board அறிமுகப்படுத்தப்பட்டது
- ✓ 2010 - இரண்டாந்தரப்பலகை என்பது “திரிசவிப்பலகை” ஊக்குவிப்பு பலகை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது
- ✓ 2012 – முதலாந்தர, இரண்டாந்தரப்பலகையின் நி[illegible]கள் மாற்றப்பட்டது
- 2012 – S& P – SL- 20 எனும் பங்கு விலைச் சு[illegible] [illegible]முகமானது

✓ 2013 – MILANKA price Index – நீக்கம் செய்யப்பட்டது

## பங்குச் சந்தை கொடுக்கள் வாங்கல் முறைகள்

01.தன்னியக்க வியாபார முறைமை

இணையத்தினூடாக பங்கு விற்பனையும், கொடுக்கல் வாங்கல்களும் இடம் பெறும் முறையாகும். இதன் மூலம் விரைவான ,வினைத்திறன் மிக்க பங்குப் பரிமாற்றம் இரண்டாந்தர பங்குச் சந்தையில் மேற்கொள்ளப்படுகின்றது.

02. கடன் பிணைப்பத்திர வியாபாரம்

கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் தொகுதிக் கடன் பத்திரங்கள், அரச திறைசேரி முறிகள்,ஆவணங்கள் இணையத்தினூடாக பரிமாற்றம் செய்யப்படும் முறையாகும். 2004 இல் அறிமுகமான இச் சந்தையில; "Tom Board", "Cash Board", "Spot Board" போன்ற பலகை வகைகள் காணப்படுகின்றன.

## பங்குச் சந்தையில் பட்டியலிடும் முறைகள்

பங்குகள் :-

❖ அறிமுகப்படுத்தல்

ஒருகம்பனிப் பங்குச் சந்தையின் மூலம் முதல் தடவையே பங்குகளையும் தொகுதிக்கடன்களையும் வழங்குதல்

❖ விற்பனைக்கான அறிவுறுத்தல்

ஒரு கம்பனி மேலதிக மூலதன தேவை கருதி பங்குகளையும், தொகுதிக்கடன்களையும் மீண்டும் பங்குச் சந்தையின் ஊடாக வழங்குதல்

❖ பங்களிப்புக்கான அறிவித்தல்

தொகுதிக்கடன்கள் :-

❖ அறிமுகப்படுத்தல்
❖ பங்களிப்புக்கான அறிவித்தல்

## மத்திய வைப்புத்திட்ட முறை

பங்குதாரர்களுக்கான பங்குப்பத்திரங்களை நம்பிக்கைப் பொறுப்பு வியாபாரத்தில் வைத்துப் பாதுபாக்கும் செயற்பாடு மத்தி வைப்புத் திட்டமுறையாகும். வரவு செலவு கணக்குப் பதிவுகள் கணனிகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. புங்குப்பரிவர்த்தனைணின் துணைக்கம்பனியாக வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பு முறைகள் சொந்தக்கம்பனி அமைக்கப்பட்டு இத் தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

## இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு

இலங்கையின் பிணையங்களுக்கான சந்தையை ஒழுங்குபடுத்திப ங்குபரிவர்த்தனை, பங்குத்தரகர், அலகுப் பொருப்பாட்சி ஸ்தாபனம் என்பவற்றிக்கு அனுமதி வழங்கி, கட்டுப்படுத்தி, வழி நடத்தவும் அவற்றின் முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்கவும் என விறுவப்பட்ட அரச அமைப்பு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவாகும்.

## பங்கு விலைச் சுட்டெண்கள்

பங்குகளின் சந்தை விலைப்போக்கினை அறிய உதவும் குறிகாட்டிகள் சுட்டெண்கள் ஆகும். அவை பின்வருமாறு அமைகிறது.

1. மொத்த / எல்லா / அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்
   இது பங்குச் சந்தையில் விலை கூறப்பட்ட அனைத்துக்கம்பனிகளின் பங்கு விலைமாற்றங்களை கருத்தில் கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

2.மொத்த வருவாய்ச் சுட்டி

பங்கொன்றிக்கான மொத்த வருவாய்க்கும் அதன் விலைக்கு இடையிலான தொடர்பினைக் கணிப்பிடும் சுட்டியாகும்

ஆக்கம் :- சி. சஞ்சீவன்

வர்த்தகப் பிரிவு(2014)

# கணக்கீட்டு எண்ணக்கருக்கள்

அலகுசார் எண்ணக்கரு

- ✓ வணிகமானது உரிமையாளரிலிருந்து வேறுபட்ட தனியான அலகொன்றாகும் எனக் கருதிக் கணக்குகளை பேணுதலாகும்.
- ✓ உரிமையாளருக்கு வேறுபட்ட வணிகங்கள் இருப்பின் அவற்றுக்குரிய கணக்குகள் வேறாகப் பேணப்பட வேண்டும்.

### தொடங்கியங்கும் எண்ணக்கரு

- ✓ வணிகமொன்று வரையறையற்ற நீண்டகாலப் பகுதிக்கு தொடர்ச்சியாக செயற்படும் எனக் கருதிக் கணக்குகளைப் பேணுவதாகும்.
- ✓ தொடர்ந்தியங்கும் தன்மை காரணமாகவே நிலையான சொத்துக்கள் கிரயத்தின் படி கணக்குகளில் காட்டப்படுகின்றன.

### கால அளவு எண்ணக்கரு

- ✓ நிதிக் கூற்றுக்களைப் பயன்படுத்தும் தரப்பினர்கள் தமது தீர்மானங்களைச் சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு வணிகத்தினது தகவல்களை ஒழுங்கான இடைவெளி ஒன்றிக்கமைய பகுத்து வழங்குதலாகும்.

### பண அளவீட்டு எண்ணக்கரு

- ✓ பணத்தினால் அளவிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளை மாத்திரம் இனங்கண்டு கணக்குகளில் பதிவு செய்தலாகும்..
- ✓ பணத்தினால் அளவிட முடியாத கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் கணக்குகளில் பதிவு செய்யப்படுவதில்லை.

### நிலுவை எண்ணக்கரு

- ✓ நிதியாண்டு தொடர்பாக உண்மையாக உழைக்கப்பட்ட வருமானங்களையும் உண்மையாக ஏற்பட்ட செலவினங்களையும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்காக இவை தொடர்பான வருமதிகள், சென்மதிகள், முற்பணங்களை சீராக்கஞ் செய்தல் வேண்டும்

### தோற்றத்திலும் பார்க்கக் கருத்து முக்கியத்துவம்

- ✓ கொடுக்கல் வாங்கல்கள் அல்லது நிகழ்வு ஒன்றினது சட்டரீதியான தன்மையைவிட அதன் பொருளாதாரரீதியான தன்மைக்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்படும் என்பதாகும்.

### இணைதல் எண்ணக்கரு

- ✓ வணிகமானது நிதியாண்டுக்குரிய செயற்பாட்டுப் பெறுபேறுகளை தீர்மானிக்கும் போது அந்நிதியாண்டில் உழைக்க[illegible]ருமானங்களுக்கெதிராக ஏற்பட்ட செலவினங்கள் யாவற்றையும் ஒப்பிடுதல் வே[illegible] என்பதாகும்.

### கோள்கை மாறா எண்ணக்கரு

✓ நிதியறிக்கைகளை தயாரித்தல், சமர்ப்பித்தல் தொடர்பாகப் பின்பற்றப்படும் கணக்கீட்டு நடைமுறைகள், ஒழுங்குகள்,அடிப்படைகளை அடிக்கடி மாற்றாது தொடர்ச்சியாகப் பின்பற்றுதல் வேண்டும் என்பதாகும்.

### தேறல் எண்ணக்கரு

✓ வணிகமொன்றில் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது நிகழ்வுகள் நிகழும் சந்தர்ப்பத்திலேயே அவற்றினது பொருளாதார மற்றும் செயற்பாட்டு விளைவுகள் கணக்கேடுகளில் இடம் பெற வேண்டும் என்பதாகும்.

### பாதுகாப்பு எண்ணக்கரு

✓ உள்ளதைவிட இலாபங்கள் அல்லது சொத்துக்களில் பெறுமதிகள் கூட்டிக் காட்டப்படவில்லை என்பதுடன் பொறுப்புக்களின் தொகைகள் குறைத்துக்காட்டப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் எண்ணக்கருவாகும்.

### பொருண்மை எண்ணக்கரு

✓ வணிகக் கொடுக்கல் வாங்கல்களானவை நிதியறிக்கைகளை பயன்படுத்துவோரின் தீர்மானங்களை மேற்கொள்ளும் இயலுமையில் ஏற்படுத்தும் தாக்கத்தின் அளவைப் பொருத்தே அவற்றின் பொருண்மைத்தன்மை தீர்மானிக்கப்படும்

### வரலாற்றுக் கிரய எண்ணக்கரு

✓ வணிகமொன்றில் இடம்பெறும் நடவடிக்கைகள் யாவும் அவை இடம்பெற்ற காலப்பகுதிக்குரிய பெறுமதியிலேயே பேணப்படும் என்பதாகும்.

✓ வணிகக் கொடுக்கல் வாங்கல்களைக் கிரயத்தின் அடிப்படையில் பதிவு செய்வது இலகுவானதாகவும் உண்மைத்தன்மை கொண்டதாகவும் சொத்துக்களின் பெறுமானம் காட்டப்படுவதை உறுதிசெய்யும்.

✓ **இரட்டை விளைவு எண்ணக்கரு**

வணிகத்தினது நடவடிக்கைகள் அனைத்தும் இரு விளைவுகளைக் கொண்டன.

இவற்றின் ஒரு விளைவு சொத்தாகவும், மற்றைய விளைவு அச் சொத்துக்கு எதிரான உரிமையையும் குறிப்பதாகும்.

## வெளிப்படுத்தல் எண்ணக்கரு

✓ வணிகமொன்றின் செயற்பாடுகளை பயன்பாட்டாளர்கள் மதீப்பீடு செய்வதற்கு உதவக்கூடிய அனைத்து தகவல்களும் நிதியறிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டும்.

### நோக்கமான எண்ணக்கரு

✓ கணக்கீட்டுத் தகவல்கள் பல் வகைப்பட்ட பயன்பாட்டாளர்களின் பொதுவான தேவைகளை திருப்தி செய்தல் வேண்டும். ஆகையால், அது ஒரு கட்சியினருக்கு மாத்திரம் வாய்ப்பளிக்குமாறு பக்கச் சார்பாக கையாளப்படலாகாது.

## காசுக்கணக்கு

வணிக நிறுவனமொன்றில் நிகழும் காசுப் பெறுவனங்களையும் காசுக் கொடுப்பனவுகளையும் பதிவு செய்வதற்குரிய மூல ஏடாக அமைவது காசுக் கணக்காகும். காசுக் கணக்கு மூல ஏடாகவும் பேரேட்டுக் கணக்காகவும் இரட்டைத் தொழிற்பாட்டை மேற்கொள்வதுடன், இதுவொரு துணையேடாகவும் கருதப்படுகின்றது. காசுக் கணக்கு என்பது சொத்துக் கணக்காகும்.

காசுப் பெறுவனவுக்குரிய மூல ஆவணமாக பற்றுச் சீட்டும், காசுக் கொடுப்பனவுகளுக்குரிய மூல ஆவணமாக கச்சாத்தும் கருதப்படுகின்றது.

## வங்கிக் கணக்கு

வணிக வங்கிகளில் ஏற்படுத்தப்படக் கூடிய நிடைமுறைக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் மூல ஏடு வங்கிக் கணக்கு எனப்படும்.இக் கணக்கும் ஒரு துணையேடு ஆகும்.

வங்கிக் கணக்கு சொத்துக் கணக்கு அல்லது பொறுப்புக் கணக்கு எனக் கருதப்பட முடியும். வங்கிக் கணக்கு மீதி வரவு மீதியைக் கொண்டிருக்குமாயின் அதனை சொத்துக் கணக்காகவும், மாறாச் செலவு மீதியினைக் கொண்டிருக்குமாயின் பொறுப்புக் கணக்காகவும் கருதப்படல் வேண்டும். நடைமுறைக் கணக்கு வைத்திருப்போர் வங்கி மேலதிகப் பற்றுக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதனால் வங்கிக் கணக்குச் செலவு மீதியினைக் கொண்டிருக்க முடியும்.

## வணிகக் கணக்கினைத் தயாரிப்பதற்குரிய மூல ஆவணங்களாக அமைவன

1. வங்கிக் கூற்றுக்கள்.
2. வைப்புத் துண்டுகள்.
3. மீள எடுத்தல் பத்திரம்.

4. பற்றுச் சீட்டுக்கள்.
5. கச்சாத்துக்கள்.

**வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள்.**

1. காசோலை மற்றும் காசு வைப்புக்கள்.
2. நேரடி வைப்புக்கள்.
3. நிலையான கட்டளைப்படி வங்கியால் வசூலித்துச் சேர்க்கப்பட்ட வருமானங்கள்.
4. வழங்கி மறுக்கப் பட்ட காசோலைகள்.

**வங்கிக் கணக்கில் செலவு வைக்கப் படும் கொடுக்கல் வாங்கல்கள்**

1. காசோலை மூலமான கொடுப்பனவுகள் .
2. வங்கி அறவீடுகள்.
3. நிலையான கட்டளைப்படிக்கமைவான கொடுப்பனவுகள்.
4. வைப்புச் செய்து மறுக்கப்பட்ட காசோலைகள்.

ஆக்கம்

சி.நிரோயன்

வர்த்தகப் பிரிவு (2014)

## பொதுத் தகவல் தொழில்நுட்ப வினா விடை

1. தசம எண் 77 இற்கு சமவலுவான துவித எண்?

   ➢ 1001101

2. 11012 , 1012 ஆகிய துவித எண்களின் கூட்டுத்தொகை?

   ➢ 10010

3. திரான்சிற்றர் தொழில்நுட்ப... ப்பட்ட கணினித் தலைமுறை?

➢ 2ம் தலைமுறைக் கணினி

4. துவித எண் 111010 இற்கு சம வலுவான எண்ம எண்?

➢ 72

5. GUI இனால் குறிப்பிடப்படுவது?

➢ General Utilities Intervention

6. தகவல் முறைமையானது எத்தனை அடிப்படைக் கூறுகளால் ஆக்கப்பட்டது?

➢ மூன்று

7. 3* 3 அட்டவணை ஒன்றை ஆவணமொன்றில் உட்புகுத்த செய்யவேண்டியது?

➢ நியமக் கருவிப் பட்டியிலுள்ள Insert table பொத்தானை அழுத்துதல்

8.மூன்றாம் தலைமுறைக் கணினிகளுக்கு அடிப்படையாக அமைந்தது?

➢ IC

9.NOT (NOT(X AND Y) இன் வருவிளைவு எதற்கு சமவலுவானது?

➢ X AND Y

10 .1kg சீனியின் விலை ரூபா 100 உம் ஒரு நூடில்ஸ் பைக்கேற்றின் விலை ரூபா 45 ஆகும். 1kg சீனியினதும் 1 பைக்கற்நூடில்ஸ் இனதும் விலைகளின் கூட்டுத் தொகையின் எண்ம வடிவம்.

221

11.விண்டோஸ் பணிசெயல் முறைமை ஒன்றிலுள்ள எந்தப்பகுதி நிரலாக்கங்களை சேர்ப்பதற்கு அல்லது

➢ Control panel

12.format செய்யப்பட்ட இலக்கமானது சிற்றறை ஒன்றில் தெரியாத போது, எவ்வாறு காட்சியளிக்கும்?

➢ #####

13.அருகருகே இல்லாத சிற்றறையினை நீர் தெரிவு செய்யும் போது எச் சாவியினை தொடர்ச்சியாக அழுத்துவீர்

- CTRL

14.நிகழ்த்துகை ஒன்றிலுள்ள சட்டகங்களுக்கு (slides) விசேட effects இனை அறிமுகப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுவது

- Transitions

15.கமலினுடைய வயது 35 ஆகும். சரத் 2 வருடங்கள் கமலைவிட இளையவன். அவர்களுடைய வயதுகளை துவித எண்களில் சரியாக காட்டுவது

- கமல் 100011, சரத் 10001

16.மிகவும் விரைவாக தரவு கடத்தும் தொடர்பாடல் ஊடகம் எது?

- இழை ஒளிவம் (fiber optics)

17.இலத்திரனியல் காட்சிப்படுத்தலின்போது திரையில் கறுப்பு நிறத்தை ஏற்படுத்தவும் திருத்தவும் மேற்கொள்ளப்பட வேண்டியது

- Press key 'B' once

18.ஒரு ஆவணத்தில் margin ஒழுங்கு படுத்த உபயோகிக்கப்படுவது?

- Page setup

19.தரப்பட்ட ஒரு சொல்லிற்கு சமனான எழுத்தைக் கண்டுபிடிப்பதற்கு சொல்வழிப்படுத்தும் மென்பொருளில் பயன்படுத்தப்படும் கருவி?

- Thesaurus

20. தரவு முகாமைப்படுத்துவதற்கு மிகவும் சிறந்த பிரயோக மென்பொருள்?

- தரவுத் தளம்

21.ஒரு மின்னஞ்சல் முகவரியை இரு பெரும் பிரிவுகளாக வேறுபடுத்தும் குறியீடு யாது?

- @

22.தரவுத்தளம் ஒன்றில primary object ஆக கருதப்படக் கூடியது எது?

- Table

23.கணினி முறைவழியாக்கிகளில் தொழிலுட்பவியல் கூர்ப்பின் சரியான ஒழுங்குமுறையைத் தருக?

- வெற்றிடக்குழாய், திரா[illegible]ர், ஒன்றிணைந்த சுற்று, பேரளவு ஒன்றிணைப்பு

24.பின்வருவனவற்றுள் உள்ளீட்டுச் சாதனமாகவும், வெளியீட்டுச் சாதனமாகவும் தொழிற்படும் சாதனம் எது?

- தொடுதிரை

25.yahoo, google, youtube ஆகியன எதற்கு உதாரணங்களாகும்?

- தேடற்பொறிகள்

26.சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் Ctrl + S குறுக்குவழிச் சாவிகள் பயன்படுத்தும் போது

- கோப்புச் சேமிக்கும் சொல்லாடற் பெட்டி (File saving Dialog box

27.ஒரு மின் விரிதாளில் ஒரு நிரையும் ஒரு நிரலும் இடைவெட்டல் எவ்வாறு அழைக்கப்படும்?

- கலம்

28.முன் வைப்புகளுக்காக இலவசமாகப் பெறத்தக்க மென்பொருள் பின்வருவனவற்றில் எது?

- Open Office. Org impress

29. இணையத்தினூடாக உள்ள வலையமைப்புக்களுக்கு (LAN) அனுமதியின்றி நுழைவதைத் தவிர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுவது எது?

- Firewall

30.Superscript, subscript, outline, emboss, engrave ஆகியன அடங்குவது

- Font effects

31.ஒரு கணினியின் clipboard ஆனது

- தரவு ஒன்றினை நகல் எடுக்கும் போது சேமிக்கும்

32.ஒரு ஆவணத்தைச் சேமிப்பதற்கான குறுக்கு வழிச் சாவி ஒன்றின் பெயரைத் தருக?

- Ctrl + S

ஆக்கம்<br>சி.நிரோபன்<br>வர்த்தகப் பிரிவு (2014)

# பல்தேர்வு வினாவிடை

## பொருளியல்

1) பின்வருவனவற்றில் நியமக் கூற்றாக அமைவது எது?
   a) பொருளியலாளர்கள் இயற்கை வளங்களை புதுப்பிக்கத்தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்கப்படமுடியா வளங்கள் என வகைப்படுத்துகின்றனர்
   b) சுற்றாடல் என்பது அருமையான வளத்திற்கான ஓர் உதாரணமாகும்
   c) பொருளாதாரங்கள் வரையறையற்ற விருப்பங்களைப் பூர்த்தி செய்ய வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டுள்ளன
   d) இலங்கையின் பண வீக்கம் தற்போது ஒற்றை இலக்கத்தில் உள்ளது
   e) வருமானம் சமமற்ற முறையில் பங்கீடு செய்யப்படுவது நியாயமற்றதாகும்

2) நிறை தொழில் மட்டத்திலுள்ள பொருளாதாரமொன்றில் மூலதன முதலீட்டினை அதிகரித்துக் கொள்வதற்கான அமையச் செலவாக அமைவது
   a) நுகர்வில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
   b) வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
   c) சேமிப்பில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
   d) வட்டிவீதத்தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பில்
   e) வெளியீட்டில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

3) "மாறுநிலைப் பொருளாதாரம்" என்பதனால் விபரிக்கப்படுவது
   a) ஊழியச் செறிவுடைய முறைகளுக்குப் பதிலாக மூலதனச் செறிவுடைய முறைகளை கைக்கொள்ளும் ஒரு நாட்டையாகும்
   b) மத்திய திட்டமிடலிலிருந்து சந்தைமுறைமையை நோக்கி நகரும் ஒரு நாட்டையாகும்
   c) குறைந்த வருமானம் பெறும் நாடுகளின் வரிசையிலிருந்து நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் வரிசைக்கு நகரும் நாட்டையாகும்
   d) வர்த்தக நிலுவைப்பற்றாக்குறை நிலையிலிருந்து வர்த்தக நிலுவை மிகைநிலைக்கு மாறும் நாட்டையாகும்
   e) பாரம்பரியப் பொருளாதாரத்திலிருந்து மத்திய திட்டமிடற் பொருளாதாரமாக மாறும் ஒரு நாட்டையாகும்

4) மத்திய திட்டமிடற் பொருளாதார முறையின் ஒரு முக்கிய பண்பாக அமைவது
   a) வளஒதுக்கீடு சார்பு விலைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும்
   b) பொருளாதார வீழ்ச்சிக்கு அடிப்படையாகவுள்ள தனியார் சொத்துரிமை காணப்படுவதாகும்
   c) பொருளாதாரத்தில் பொருட்களையும் சேவைகளையும் எவ்வாறு சிறப்பாக உற்பத்தி செய்யலாம் என்பது பற்றிய தீர்மானங்கள் அரசாங்க கொள்ளை வகுப்பாளர்களால் மேற்கொள்ளப்படுவதாகும்
   d) சந்தைப் பொருளாதார முறையை விட அதிசிறந்த பொருளாதார வினைத்திறனை அடைவதாகும்

e) வருமானம் மற்றும் செல்வம் என்பன மிகவும் சமமற்ற விதத்தில் பங்கீடு செய்யப்படுவதாகும்

5) நிறுவனத்தின் மொத்த வருவாய் குறைவடைவது
a) நிரம்பல் நெகிழ்வுள்ள நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்
b) கேள்வி நெகிழ்வுள்ள நிலையில் விலை வீழ்ச்சியடையும் போதாகும்
c) கேள்வி நெகிழ்வற்ற நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்
d) கேள்வி நெகிழ்வுள்ள நிலையில் விலை அதிகரிக்கம் போதாகும்
e) கேள்வி அலகு நெகிழ்ச்சியுள்ள நிலையில் விலை வீழ்ச்சியடையும் போதாகும்

6) x என்பது ஒரு விழிப்பொருளாயின், வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியானது அப்பொருளின்
a) கேள்வியைக் குறைக்கும், விலையைகூட குறைக்கும் அத்துடன் கேள்வித்தொகையை வீழ்ச்சியடையச் செய்யும்
b) கேள்வியைக்குறைக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும்
c) கேள்வியை அதிகரிக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும்
d) நிரம்பலை அதிகரிக்கும், விலையைக்குறைக்கும் அத்துடன் கேள்வித் தொகையை அதிகரிக்கச் செய்யும்
e) கேள்வியை அதிகரிக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை அதிகரிக்கச் செய்யும்

7) தோடம்பழங்களுக்கான சந்தை சமநிலையில் உள்ளதாகக் கருதுக. தோடம்பழங்களின் நிரம்பல் வீழ்ச்சியடையும் அதேவேளை அவற்றுக்கான கேள்வி அதிகரிக்குமாயின், சந்தையில் தோடம்பழங்களின் விலை மற்றும் தொகை பற்றி நீர் என்ன கூற முடியும்?
a) விலை, தொகை ஆகிய இரண்டுமே அதிகரிக்கும்
b) விலை அதிகரிக்கும் ஆனால் தொகையில் ஏற்படும் மாற்றம் நிச்சயமற்றதாகும்
c) விலை, தொகை ஆகிய இரண்டுமே வீழ்ச்சியடையும்
d) தொகை அதிகரிக்கும் ஆனால் விலையில் ஏற்படும் மாற்றம் நிச்சயமற்றதாகும்
e) கேள்வி, நிரம்பல் வளையிகளில் ஏற்படும் மாற்றங்கள் ஒன்றையொன்று ஈடுசெய்து விடுவதால் விலையும் தொகையும் மாறாதிருக்கும்

8) பிள்ளைகளை பகல் வேளைகளில் பராமரிக்கும் நிலையங்களுக்கு அனுப்பும் செலவை ஈடுசெய்ய மானியமாகப் பயன்படுத்தக் கூடியவாறு ஒவ்வொரு பெற்றோருக்கும் அரசாங்கம் கூப்பன்களை வழங்குமாயின் பகல்வேளைகளில் பராமரிப்புச்சேவையினை வழங்கும் நிறுவனங்களின் சந்தையில் யாது நிகழுமென நீர் எதிர்பார்ப்பீர்?
a) பகல் வேளைப் பராமரிப்புச் சேவைக்கான கேள்வி குனறவதோடு விலையும் வீழ்ச்சியடையும்
b) பகல் வேளைப் பராமரிப்புச் சேவைக்கான கேள்வி அதிகரிப்பதோடு விலையும் அதிகரிக்கும்

c) பகல் வேளைப் பராமரிப்புச் சேவை நிரம்பல் அதிகரிப்பதோடு அதன் விலை வீழ்ச்சியடையும்
d) பகல் வேளைப் பராமரிப்புச் சேவை நிரம்பல் வீழ்சியடையும் அதே வேளை விலை அதிகரிக்கும்
e) பகல் வேளைப் பராமரிப்புச் சேவைக்கு நிரந்தரமாக ஒரு பற்றாக்குறை நிலவும்

9) நுகர்வோன் மிகை பூச்சியமாக மாறத் தேவையான நிபந்தனை எது?
a) வேள்வி பூரண விலை நெகிழ்வுள்ளது
b) கேள்வி பூரண விலை நெகிழ்வற்றது
c) நிரம்பல் பூரண நெகிழ்வுள்ளது
d) நிரம்பல் பூரண நெகிழ்வற்றது
e) கேள்வியின் விலை நெகிழ்ச்சியானது சார்பளவில் நிரம்பலின் விலை நெகிழ்ச்சியை விட உயர்வானது

10) "சாதாரண பொருளொன்றின்" விலை மற்றும் சந்தையில் அதன் விற்ப்பனைத் தொகை இரண்டிலுமே ஏக காலத்தில் ஒரு அதிகரிப்பினை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வாக அமைவது
a) பொருளின் மீது விதிக்கப்பட்டிருந்த பயனுறுதிமிக்க உயர்ந்தபட்ச விலையானது நீக்கப்படாமை
b) பொருளின் உற்பத்தியில் ஏற்படும் தொழிநுட்ப முன்னேற்றம்
c) பொருளின் மீது வரிவிக்கப்படல்
d) பொருளின் உற்பத்தியாளர்களுக்கு மானியமொன்று வழங்கப்படல்
e) குறித்த பொருளின் பதிலீடொன்றின் விலையில் எற்படும் வீழ்ச்சி

11) ஊழியத்தின் எல்லை உற்பத்தியானது ஊழியத்தின் சராசரி உற்பத்திக்குச் சமனாகும் போது
a) ஊழியத்தின் எல்லை உற்பத்தி உச்சத்திலிருக்கும்
b) உற்பத்தியின் எல்லைச் செலவு உச்சத்திலிருக்கும்
c) எல்லைச் செலவானது சராசரி மாறும் செலவின் அதிகுறைந்த மட்டத்திற்குச் சமனாகும்
d) சராசரி மொத்தச் செலவு அதி குறைந்த மட்டத்திலிருக்கும்
e) ஊழியத்தின் மொத்த உற்பத்தி அதன் உச்சத்திஜலிருக்கும்

12) நிறுவனமொன்று தனது ஊழியப்படையை 100 இலிருந்து 102 தொழிலாளர்களாக அதிகரிக்கும் போது அதன் நாளாந்த கூலியினை ரூபா 600 இலிருந்து ரூ 650 ஆக அதிகரிக்க வேண்டியுள்ளது. இந் நிலைமையின் கீழ் ஊழியத்தின் நாளொன்றுக்கான எல்லைச் செலவு?
a) ரூபா 50 ஆகும்
b) ரூபா 650 ஆகும்
c) ரூபா 5650 ஆகும்
d) ரூபா 60000 ஆகும்
e) ரூபா 65650 ஆகும்

13) ஒரு கைத்தொழில் எண்ணிக்கையிலான நிறுவனங்களைக் கொண்டிருப்பததோடு ஒவ்வொரு நிறுவனமும் ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்கின்றது. இந்நிலையில்

ஒவ்வொரு தனிப்பட்ட நிறுவனமும் கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் கேள்வி வளையியை எதிர்நோக்குமாயின் அதனை பின்வருவனவற்றில் எது விளக்கக் கூடும்.

a) எல்லா நிறுவனங்களும் விலையை ஏற்போராகத் தொழிற்படுகின்றன
b) பிரவேச மற்றும் வெளியேற்ற சுதந்திரம்
c) உற்பத்தி வளங்கள் பூரண அசைவுள்ளன
d) நுகர்வோர் செலவிடுவதற்காகக் கிடைக்கும் பணத்தொகை வரையறைக்குட்பட்டிருத்தல்
e) நுகர்வோரின் சந்தை பற்றிய அறிவு பூரணமற்றிருத்தல்

14) பின்வருவனவற்றில் மொத்த மெய் உள்ளாட்டு உற்பத்தியின் அளவில் பாதிப்பை ஏற்படுத்தாதது எது?

a) நுகர்வோனொருவன் தனது தனிப்பட்ட உபயோகத்திற்காக புதிய மோட்டார் வண்டி ஒன்றை கொள்வனவு செய்தல்
b) அரசாங்கம் தனது பாதுகாப்பு கற்கை நிறுவனத்திற்காக புதிய பேரூந்து வண்டி ஒன்றைக் கொள்வனவு செய்தல்
c) நுகர்வோனொருவன் சிகையலங்கார சேவையினைப் பெற்றுக் கொள்ளல்
d) ஒரு முதலீட்டாளன் அரிய வகை ஓவியமொன்றை ஏலத்தில் கொள்வனவு செய்தல்
e) ஒரு நிறுவனம் தனது தொழிற்சாலைக்காக புதிய மின் பிறப்பாக்கியொன்றைக் கொள்வனவு செய்தல்

15) பொருளாதாரமொன்றின் தன்னிச்சையான நுகர்வு ரூபா 400 எனவும் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 எனவும் கொள்க. செலவிடத்தக்க வருமானம் ரூபா 1200வினால் அதிகரிக்குமாயின் நுகர்வுச் செலவீடு அதிகரிக்கும் அளவு

a) ரூபா 1600 ஆகும்
b) ரூபா 1360 ஆகும்
c) ரூபா 1200 ஆகும்
d) ரூபா 960 ஆகும்
e) ரூபா 400 ஆகும்

16) தொகை வரியினை மாத்திரம் கொண்டுள்ள மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றில் எல்லைச் சேமிப்பு நாட்டம் 0.25 ஆகக் காணப்படுமாயின் அரசாங்க செலவீட்டில் ஏற்படும் ரூபா 80 பில்லியன் அதிகரிப்பானது வெளிநாட்டில் ஏற்படுத்தக்கூடிய உச்ச அதிகரிப்பினளவு

a) ரூபா 80 பில்லியனாகும்
b) ரூபா 80.25 பில்லியனாகும்
c) ரூபா 160 பில்லியனாகும்
d) ரூபா 240 பில்லியனாகும்
e) ரூபா 320 பில்லியனாகும்

17) அரச துறையற்ற மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் நுகர்வுச்சார் $C=30+0.7Y$ ஆகவுள்ளது. சம நிலை வருமான மட்டம் ரூபா 300 மில்லியனாக இருப்பின் முதலீட்டுமட்டத்தின் அளவு

a) ரூபா 60 மில்லியனாகும்
b) ரூபா 100 மில்லியனாகும்
c) ரூபா 210 மில்லியனாகும்
d) ரூபா 240 மில்லியனாகும்

e) ரூபா 300 மில்லியனாகும்

18) குறித்த ஒரு ஆண்டில் ஒருநாட்டின் நுகர்வு, முதலீடு, மற்றும் அரச கொள்வனவுகள் என்பவற்றின் மீதான செலவீடுகள் அந் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 103 காணப்பட்டன. இந் நிலை சாத்தியமாவது

a) பணநிரம்பல் அதிகரிக்கப்பட்டால் மட்டுமேயாகும்
b) தேறிய ஏற்றுமதிகள் நேர்கணியமாக இருந்தால் மட்டுமேயாகும்
c) தேறிய ஏற்றுமதிகள் எதிர்கணியமாக இருந்தால் மட்டுமேயாகும்
d) அரசாங்கம் சமநிலைப் பாதீட்டைக் கொண்டிருந்தால் மட்டுமேயாகும்

19) வங்கி முறைமையானது ஒரேயொருவங்கியை மாத்திரம் கொண்டுள்ள மூடப்பட்ட பொருளாதாரமொன்றைக் கருதுக. இவ்வங்கியானது 10 சதவீத காசொதுக்கு வீதத்தைக் கொண்டுள்ளது. வாடிக்கையாளர்கள் ரூபா 10000பணத்தை வைப்பில் இடுகின்றனர். புழக்கத்தில் உள்ள தாள் குற்றி நாணயங்களின் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. எனக் கருதினால் இவ்வங்கி வழங்கக் கூடிய கடனின் உச்ச அளவு யாது?

a) ரூபா 1000 ஆகும்
b) ரூபா 9000 ஆகும்
c) ரூபா 10000 ஆகும்
d) ரூபா 90000 ஆகும்
e) ரூபா 100000 ஆகும்

20) பின்வரும் கொள்கைத் தெரிவுகளில் எது பொருளாதாரத்தைப் பின்னடைவிலிருந்து மீட்சியடையச் செய்ய வடிவமைக்கப்பட்ட பணக்கொள்கை மற்றும் இறைக்கொள்கைச் சேர்க்கையினைப் பிரதிபலிக்கின்றது?

a) வரிகள் மற்றும் பணநிரம்பல் ஆகிய இரண்டையும் குறைத்தல்
b) வரிகள் மற்றும் பணநிரம்பல் ஆகிய இரண்டையும் அதிகரித்தல்
c) அரச செலவினங்களை அதிகரிப்பதுடன் மத்திய வங்கி வட்டிவீதங்களைக் குறைத்தல்
d) வரிகள் மற்றும் கழிவீட்டு வீதங்கள் ஆகிய இரண்டையும் குறைத்தல்
e) குறை நிலைப் பாதீட்டை மேற்கொள்வதுடன் பிணையங்களை திறந்த சந்தையில் விற்பனை செய்தல்

21) நாடொன்றின் புள்ளி விபரத் திணைக்களகம் தனது சென்மதி நிலுவைக் கணக்கின் இறுதி வடிவத்தினை முன்வைக்க விரும்புகிறது. அது நடைமுறைக்கணக்கு நிலுவை, மூலதனக்கணக்கு நிலுவை, மற்றும் நிதிக்கணக்கு நிலுவை, என்பவற்றைக் கணிப்பீடு செய்துள்ளது? திணைக்களகத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய தேவைப்படும் மேலதிக தகவல் எது?

a) வெளிநாட்டு நாணய ஒதுக்குகளில் ஏற்படும் மாற்றம்
b) வெளிநாட்டு உதவி
c) வழக்களும் விடுபாடுகளும்
d) உத்தேச நோக்க நாணயப்பாய்ச்சல்
e) பட்டியலிடப்பட்ட முதலீடுகளில் ஏற்படும் மாற்றம்

22) நாடொன்றில் தலைக்குரிய வருமானமட்டம் சார்பளவில் குறைவாக உள்ள போது அதனோடு இணைந்ததாக பொதுவாக அவதானிக்கப்படுவது

a) ஓர் உயர் வீதத்திலான பொருளாதார வளர்ச்சி
b) ஓர் குறைந்த வீதத்திலான பொருளாதார வளர்ச்சி
c) ஒரு குறைந்த வீதத்திலான பணவீக்கம்
d) ஒரு குறைந்த வீதத்திலான சனத்தொகை வளர்ச்சி
e) ஒரு உயர் வீதத்திலான தொழில் வாய்ப்பு

23) மிகத் துரிதமான பொருளாதார வளர்ச்சியினை பெரும்பாலும் ஏற்படுத்தவல்ல ஒரு காரணிச்சேர்க்கையாக அமைவது?

a) தொழில் வாய்ப்புக்களில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு சென்மதி நிலுவையில் குறை நிலை அதிகரிப்பு
b) மூதலீட்டு மட்டம் மற்றும் தொழில்புரியும் சனத்தொகையின் அளவு என்பவற்றில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
c) வருமானம் சமமாகப் பகிரப்படுவதுடன் மாற்றல் செலுத்தல்கள் உயர்மட்டத்தில் இருத்தல்
d) பணவீக்கம் துரிதமடைதல் மற்றும் தேசிய கடன்கள் அதிகரித்தல்
e) வெளிநாட்டு நேரடி முதலீடும் வட்டி வீதமும் அதிகரித்தல்

24) ஒரு நாடு அபிவிருத்தியை அனுபவித்துள்ளது என்பதை பின்வருவனவற்றில் எம்மாற்றம் நிறப்பாக வெளிப்படுத்துகின்றது?

a) சராசரிப் பிரஜை ஒருவரின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்
b) நாட்டின மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
c) நாட்டின் வர்த்தக நிலுவையில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்
d) நாட்டின் நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
e) வளர்ந்தோர் எழுத்தறிவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

25) தரப்பட்ட பொருளாதாரமொன்றில் பத்துவருட காலப்பகுதியில் தொழில்வாய்ப்புகள், மற்றும் தொழில்லின்மை ஆகிய இரண்டுமே அதிகரித்தன இந்நிலமை பின்வருவனவற்றில் எதில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக உருவாகியிருக்கும்?

a) பிறப்பு வீதம்
b) பொருளாதார ரீதியில் செயற்படும் சனத்தொகை
c) ஆயுள் எதிர்பார்கை
d) தங்கியிருப்போர் சதவீதம்
e) வெளிநோக்கிய குடிப்பெயர்வு

## வணிகக் கல்வி

1) பின்வருவனவற்றில் வரையறுக்கப்பட்டதும் மீள் உருவாக்கம் அற்றதுமான வளங்களைக் கொண்ட தொகுதி எது?
   a. உணவுப் பயிர், வனம், வயல்
   b. பெற்றோல், நிலக்கரி, தங்கம், பிளாட்டினம், காரியம்
   c. வனம், கடல்,நீர்
   d. மீன்பிடி, விலங்குவளர்ப்பு, பறவை வளர்ப்பு
   e. நீர், காற்று, சூரிய ஒளி

2) அப்பியாசப்புத்தகங்களைத் தயாரித்து வழங்கும் ஒரு நிறுவனம் தொடர்பில் பின்வருவனவற்றில் எது வேலைச்சூழற்காரணியின் பகுதியாகும்
   a. இயற்கை
   b. அரசியல்
   c. பொருளியல்
   d. வாடிக்கையாளர்கள்
   e. தொழில்நுட்பம்

3) பின்வருவனவற்றில் எவை பொதுவாக அனைத்துமக்களுக்கும் பற்றாக்குறையின்றிக் கிடைக்கக்கூடியது?
   a. நீர், உணவு
   b. சூரியஒளி, காற்று
   c. மீன், அரிசி
   d. அரிசி, சீனி
   e. உணவு, உடை, பாதுகாப்பு

4) ஒரு நபர் தன்னைப்பற்றியும், சமூகத்தைப்பற்றியும், தன்சூழலைப்பற்றியும் சிந்திக்க வழிவகுக்கும் பிரதான காரணி அவரின்.........................ஆகும்
   a. கல்வி
   b. வருமானம்
   c. மதம்
   d. திறன்
   e. தொழில்

5) பின்வருவனவற்றில் எது அரசியல் சூழற்காரணியாக கருத முடியாதது?
   a. சட்டங்கள்

b. பணக்கொள்கை
c. வரிவிதிப்பு
d. வரிக்கொள்கை
e. பொருளாதாரக் கொள்கை

6) உற்பத்திக்கான அகச்சூழற் காரணிகளுள் ஒன்றாக அமைவது?
a. அரசு
b. சமூகம்
c. சட்டவிதிகள்
d. தொழில்நுட்பம்
e. தொழிற்படை

7) வணிகச் செயற்பாடுகளின் புதியபோக்காக விமர்சிக்கப்படுவது எதுவாக உள்ளது
a. உலகமயமாக்கல்
b. தொடர்பாடல்விருத்தி
c. போட்டி அதிகரிப்பு
d. மக்களின் அறிவு வளர்ச்சி
e. மேற்கூறப்பட்ட அனைத்தும் சரி

8) மிக விரைவாக மாற்றமடையக்கூடிய சூழற்காரணியாகப் பொதுவாகக் கருதப்படுவது?
a. அரசியல்
b. பொருளியல்
c. சமூகம்
d. தொழில்நுட்பம்
e. இயற்கை

9) பின்வருவனவற்றில் மக்கள் சூழலைச் சேராத காரணி எது?
a. நம்பிக்கைகள்
b. சமயம்
c. பால்
d. சிறுபான்மைக் குழுக்கள்
e. நியமங்கள்

10) வணிகர் ஒருவரால் எளிதில் கட்டுப்படுத்தக்கூடிய சூழலாக நீர் கருதக் கூடியது?
a. சமூகம்
b. மக்கள்
c. உரிமையாளர்கள்
d. தொழில்நுட்பம்
e. வாடிக்கையாளர்கள்

1[illegible] வெளியகச்சூழல் காரணிகளில் பொருளாதாரச் சூழலின் [illegible]கமாக கருதக்கூடியது?
a. வயதமைப்பு

b. பால்அமைப்பு
c. ஆட்சிமாற்றம்
d. அரச பணிகளில் மாற்றம்
e. பங்குச்சந்தை

12) PEST பகுப்பாய்வின் முக்கிய நோக்கமாக கருதக்கூடியது?
a. வணிகத்தின் சாதனைகளை மதிப்பிடுதலாகும்
b. வணிகத்தின் போட்டித் தந்துரோபாயங்களை இணங்கானல் ஆகும்
c. வணிகச் சந்தர்ப்பங்களை இணங்காணல் ஆகும்
d. ஊழியர்களின் செயற்திறனை மதிப்பிடுதல் ஆகும்
e. நட்ட அச்சத்தை இழிவுபடுத்துதலாகும்

13) பின்வருவனவற்றுள் எதனை அகச்சூழற்காரணியாக கொள்ளமுடியாது?
a. சந்தைவாய்ப்பு
b. முகாமைத்துவத்திறன்
c. முயற்சியாளனின்திறமை
d. தொழிலாளர் நலன்நோன்பல்
e. ஊழியர்விசுவாசம்

14) பின்வருவனவற்றில் எது தற்போது மக்களிடமிருந்து பெருமளவிற்கு பொழுதுபோக்கு நேரத்தை ஈர்த்துள்ளது?
a. வாசித்தல்
b. தொலைக்காட்சிப்பார்த்தல்
c. குடும்பத்தடன் நேரத்தைச் செலவிடல்
d. சினிமாவுக்குச் செல்லுதல்
e. கணினிச் செயற்பாடுகள்

15) பின்வருவனவற்றில் எதனைப் பலமாகக் கருதலாம்?
a. பருவகாலமாற்றம்
b. அரசியல்மாற்றங்கள்
c. தொழில்நுட்ப மாற்றங்கள்
d. ஒரு நற்பெயர்
e. போட்டியாளர்களின் அதிகரிப்பு

16) உலக மக்கள் சூழல் தொடர்பில் மிகச்சரியான கூற்று எது?
a. உலகில் சுமார் 18 வீதத்தினருக்கு எழுத வாசிக்க முடியாது உள்ளனர்
b. உலகில் சுமார் 33 வீதத்தினர் கைதொலைபேசி வைத்துள்ளனர்
c. உலகில் சுமார் 16 வீதத்தினர் இன்ரநெற் தொடர்பு கொள்பவர்
d. உலகில் கிறிஸ்தவர்கள் அதிகமுள்ளனர்
e. மேறகூறப்பட்ட எல்லாம் சரி

17) ப.ப.வா அ பாகுப்பாய்வு காரணிகளில் உள்ளடங்கலாக கொள்ளமுடியாதது?
a. வணிக வாய்ப்புக்கள்
b. வணிகத்தின் பலம்

c. வணிகத்தின் பலவீனம்
d. வணிகத்தின் இலக்குகள்
e. வணிக அச்சுறுத்தல்கள்

18) வணிக நிறுவனங்களின் தீர்மானம் எடுத்தலின் பாதிப்பை ஏற்படுத்தும் சமூக அக்கறை கொண்ட அரசு சாராத ஆனால் உள்ளூர் அல்லது மத்திய அரசினூடாக தாக்கத்தைக் கொடுக்கக் கூடிய அமைப்பு எது?
a. உள்ளூராட்சி மன்றம்
b. மகாணசபை
c. மத்திய அரசு
d. அழுத்தக்குழு
e. மேற்கூறிய எல்லாம்

19) பின்வருவனவற்றில் தொழில்நுட்பச் சூழற்காரணியாக கருத முடியாதது எது?
a. தொலைத்தொடர்பாடல்
b. தகவல் தொழல்நுட்ப வளர்ச்சி
c. புதிய மூலப்பொருட்கள்
d. நுகர்வோர் எதிர்பார்ப்பு
e. மேற்கூறப்பட்ட எவையுமல்ல

20) வியாபாரம் எதனுடன் தொடங்கியது?
a. நேர் உற்பத்தி
b. சிறப்புத் தேர்ச்சி
c. பண்டமாற்று முறைமை
d. பணப்பாவனை
e. வங்கி நடவடிக்கைகள்

21) வணிகத்தின் "சமூகப் பொறுப்பு" என்பதன் மிகப் பொருத்தமான விளக்கம் எது?
a. சமூக சேவைகளுக்கு அனுசரனை வழங்குதல்
b. சூழலுக்கு நேயமான மனிதாபிமானத்துடன் செயற்படுதல்
c. நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான பொருட்களையும் சேவைகளையும் விநியோகித்தல்
d. அக்கறையுடைய தரப்பினரின் எதிர்பார்க்கைகளைப்பூர்த்தி செய்யக்கூடிய ஒரு வழியில் செயற்படுதல்
e. ஊழியர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்குதல்

22) அரசின் இலாபக் கொள்கையின் நோக்கமாக இருப்பது
a. வங்கிகளின் வட்டி வீதத்தினை நிலையான மட்டத்தில் பேணுதல்
b. நாட்டின் பொருளாதார நிலையினை ஸ்திரமாகப் பேணுதல்
c. அரச சேவைகளைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லல்
d. உள்நாட்டு பொருளாதாரத்தின் விலை மட்டத்தினை நிலையாகப் பேணிச் செல்லல்
பொருளாதாரத்தில் புழக்கத்திலுள்ள பண அளவினை [illegible] ப்பாட்டில் வைத்திருத்தல்

23) பின்வருவனவற்றுள் இலத்திரனியல் கொடுப்பனவு உபகரணம் அல்லாதது எது?

a. தன்னியக்க ரெலர் இயந்திர அட்டை
b. கடனட்டை
c. வரவட்டை
d. முற்கூட்டியே பணம் செலுத்தி அட்டை
e. நேர் வரவு ஒப்படைப்பு

24) திறைசேரிஉண்டியல், அரச பிணைப்பத்திரங்கள், வணிகப் பத்திரம் என்பன ஒன்றினைந்த தொகுதி எப்படி அழைக்கப்படும்?

a. உயர்வலுப்பணம்
b. வங்கிப்பணம்
c. பண்டப்பணம்
d. கிட்டிய பணம்
e. நியமப் பணம்

25) அதி உயர் பெறுமானங்களைக் கொண்ட சொத்தொன்றிக்கான நட்டத்தினை காப்புறுதிக் கம்பனி பல ஏற்றுக்கொள்ளுதல் எவ்வாறு அழைக்கப்படும்?

a. இரட்டைக் காப்புறுதி
b. மறு காப்புறுதி
c. உறுதிப் பொறுப்பேற்றல்
d. மிகைக் காப்புறுதி
e. குறைக் காப்புறுதி

# கணக்கீடு

1) பின்வரும் கணக்கீட்டு சமன்பாடுகளில் தவறான சமன்பாட்டினை கொண்டுள்ளது எது?
   a. சொத்து+ செலவு = பொறுப்பு + வருமானம்
   b. தேறிய சொத்து = உரிமையாண்மை
   c. பொறுப்பு + உரிமையாண்மை = சொத்து
   d. சொத்து – பொறுப்பு = உரிமையாண்மை
   e. சொத்து+ உரிமையாண்மை = பொறுப்பு

2) விநியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட 4000ரூபா பெறுமதியான காசோலை ஒன்று மதிப்பிழந்தமை காரணமாக அதனைப் பெற்றுக் கொண்டு புதிய காசோலை ஒன்று மீண்டும் வழங்கப்பட்டது இதனால் ஏற்படக்கூடிய தாக்கம்
   a. வங்கி மீதி குறையும் பொறுப்பு குறையும்
   b. வங்கி மீதி அதிகரிக்கும் பொறுப்புக் குறையும்
   c. வங்கி மீதி அதிகரிக்கும் வங்கி மீதி குறையும்
   d. பொறுப்புக் குறையும் பொறுப்புக் கூடும்
   e. மாற்றமில்லை

3) கணக்கீட்டுப் பணி, கணக்கீட்டின் பண்பு என்பவற்றை முறையே காட்டுவது எது?
   a. பதிவு செய்தல், வகைப்படுத்தல்
   b. வியாக்கியானம் கூறல், தொடர்பாடல்
   c. சுருக்குதல், நம்பகம்
   d. எளிமையானது, பகுப்பாய்தல்
   e. திரட்டுதல், பகுப்பாய்தல்

4) எரிபொருள் விலையேற்றம் காரணமாக குறித்த பொருள் உற்பத்தி செலவுகளில் அதிகரிப்பு ஏற்பட்டது இது உள்ளடக்கிய சூழற்காரணி எது?
   a. சட்டச்சூழல்
   b. அரசியல்சூழல்
   c. தொழினுட்பசூழல்
   d. பொருளாதாரசூழல்
   e. மேற்கூறிய அனைத்தும்

5) தற்காலிக கணக்கொன்றாக கருதக்கூடியது எது?
   a. விற்பனை நாளேடு
   b. பெற்றகழிவு கணக்கு
   c. மறுக்கப்பட்ட காசோலை கணக்கு
   d. கொடுத்த கணக்கு
   e. பொதுத்தின

6) பொருள் பற்றுக்கான இரட்டைப்பதிவை காட்டுவது எது?

   a. பற்றுக் கணக்கு வரவு விற்பனைக்கணக்கு வரவு
   b. பற்றுக் கணக்கு வரவு மூலதனக் கணக்கு வரவு
   c. மூலதனக் கணக்கு வரவு பற்றுக் கணக்கு செலவு
   d. பற்றுக் கணக்கு வரவு கொள்வனவு கணக்கு செலவு
   e. மூலதனக் கணக்கு வரவு கொள்வனவு கணக்கு செலவு

7) காசு, கழிவு நிரலை மட்டும் கொண்ட காசேடு?

   a. ஒற்றை நிரல் காசேடு
   b. இரட்டை நிரல் காசேடு
   c. மூன்று நிரல் காசேடு
   d. மேற்கூறிய அனைத்தும்
   e. மேற்கூறிய எவையுமில்லை

8) பரீட்சை மீதியில் தொங்கலை ஏற்படுத்தும் விடயம் ஒன்று?

   a. சம்பள செலவு 3000ரூபா மின்சாரக் கணக்கில் பதியப்பட்டது
   b. பெற்ற கழிவு 2000ரூபா கொடுத்த கழிவுக் கணக்கில் செலவில் பதியப்பட்டது
   c. விற்பனைபட்டியல் 1500ரூபா ஒன்று தவறவிடப்பட்டது
   d. விற்பனைபட்டியல் 2000ரூபா நாளேட்டில் இருமுறை பதியப்பட்டது
   e. கொடுத்த கழிவு 2000ரூபா காசேட்டில் வங்கி நிரலில் வரவு வைக்கப்பட்டது தவிர எப்பதிவும் இடம் பெறவில்லை

9) கணக்காண்டின் இறுதியில் பங்காளர் பற்றுக்கணக்கானது மாற்றப்படுவது

   a. பங்காளர் மூலக்கணக்கின் செலவுப்பக்கத்திற்கு
   b. பங்காளர் நடைமுறைக்கணக்கின் செலவுப்பக்கத்திற்கு
   c. பங்குடைமையின் வங்கிக்கணக்கின் வரவுபக்கத்திற்கு
   d. பங்காளர் நடைமுறைக்கணக்கின் வரவுப்பக்கத்திற்கு

10) முடிவுக்கணக்குகள் தயாரித்த பின் பங்காளர் நடைமுறைக்கணக்கின் வரவு மீதியானது

   a. பங்குடைமையால் பங்காளருக்கு வழங்கப்படவேண்டியுள்ள தொகையினைக்குறிக்கும்
   b. பங்குடைமையின் வங்கிக்கணக்கானது மேலதிகப் பற்றினைக் காட்டுவதைக் குறிக்கும்
   c. பங்காளரின் மூலதனக் கணக்கு மீதியானது குறைவடைந்துள்ளமையைக்குறிக்கும்
   d. பங்குடைமை தொழிற்பாடு மூலதனப்பற்றாக்குறையினை எதிர்நோக்குவதனைக் குறிக்கும்

11) பங்குடைமையானது குறித்தவொரு கணக்காண்டில் நட்டத்தினை உழைத்திருப்பின் அவ்விடயமானது

   a. பங்காளர் நடைமுறைக்கணக்கில் வரவு வைக்கப்படும்
   b. பங்காளர் நடைமுறைக்கணக்கில் செலவில் தாக்கல் செய்யப்படும்
   c. [illegible]டைமையின் வங்கிக் கணக்கில் செலவில் தாக்கல் செ[illegible]படும்

d. பங்காளர் சம்பளக் கணக்கில் வரவில் தாக்கல் செய்யப்படும்

12) பங்காளர் சம்பளமானது கணக்காண்டின் இறுதியில் குறித்த பங்காளனது நடைமுறைக்கணக்கில் செலவில் தாக்கல் செய்யப்படுமாயின் பகிர்வுக்குரிய இலாபமானது
a. அதிகரிக்கும்
b. குறைவடையும்
c. மாற்றமுறாது
d. மீதியிருக்கும்

13) இலாபப் பகிர்வுக்கான பதிவு
a. பங்காளர் மூலதனக்கணக்கு வரவு, பங்காளர் நடைமுறைக்கணக்கு செலவு
b. பங்காளர் வங்கிக்கணக்கு வரவு, பங்காளர் நடைமுறைக்கணக்கு செலவு
c. இலாபநட்ட பகிர்வுக்கணக்கு வரவு, பங்காளர் நடைமுறைக்கணக்கு செலவு
d. பங்காளர் நடைமுறைக்கணக்கு வரவு, இலாபநட்ட பகிர்வுக்கணக்கு செலவு

14) பங்காளன் ஒருவன் தனது சொந்த பாவனைக்காக இருப்புக்கள் சிலவற்றை அவற்றின் கிரயத்தில் பற்றியிருப்பின் அதற்கான பதிவு
a. பங்காளர் நடைமுறைக்கணக்கு வரவு, கொள்வனவு கணக்கு செலவு
b. கொள்வனவு கணக்கு வரவு, பங்காளர் நடைமுறைக்கணக்கு செலவு
c. இருப்புக்கணக்கு வரவு, இலாப நட்டக்கணக்கு செலவு
d. இலாப நட்டக்கணக்கு வரவு, இருப்புக்கணக்கு செலவு

15) பங்காளர் நடைமுறைக்கணக்கின் செலவு மீதியானது
a. நிலையான சொத்து
b. மூலதனத்தின் ஒரு பகுதி
c. நீண்டகாலப் பொறுப்பு
d. நடைமுறைச் சொத்து

16) பங்காளர் மூலதனம் மீதான வட்டியினைப் பெறும்போது பதிவு
a. நடைமுறைக்கணக்கு வரவு, மூலதனக்கணக்கு செலவு
b. இலாபநட்டப் பகிர்வுக் கணக்கு வரவு, நடைமுறைக்கணக்கு செலவு
c. நடைமுறைக்கணக்கு வரவு, இலாபநட்டப் பகிர்வுக் கணக்கு செலவு
d. மூலதனக்கணக்கு வரவு, நடைமுறைக்கணக்கு செலவு

17) பங்குடைமையின் மூலதனக்கணக்கானது நிலையானதாகப் பேணிவரப்படின் பங்காளரின் இலாபப்பங்கானது
a. மூலதனக்கணக்கில் வரவில் வைக்கப்படல் வேண்டும்
b. மூலதனக்கணக்கில் செலவில் வைக்கப்படல் வேண்டும்
c. நடைமுறைக்கணக்கில் செலவில் வைக்கப்படல் வேண்டும்
d. நடைமுறைக்கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்

18) பங்காளரின் பொறுப்புக்களும் உரிமைகளும் அவர்களிடையே
a. சுதந்திரமாக தீர்மானிக்கப்படும்

b. பங்குடைமையின் கடன் கொடுனரினால் தீர்மானிக்கப்படும்
c. 1890ஆம் ஆண்டு பங்குடைமைச் சட்டத்தினால் தீர்மானிக்கப்படும்
d. மேற்கூறிய எதுவுமில்லை

19) பங்குடைமையொன்று
a. ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்படலாம்
b. எழுத்தின் பிரகாரம் உருவாக்கப்படலாம்
c. பேச்சின் பிரகாரம் உருவாக்கப்படலாம்
d. மேற்கூறிய எதுவுமில்லை

20) வரையறுக்கப்பட்ட பங்குடைமையொன்றில் இருக்க வேண்டிய பொதுப்பங்காளனின் ஆகக்குறைந்த எண்ணிக்கை
a. 1
b. 2
c. 3
d. 7

21) எழுது பொருட்கணக்கில் வரவு மீதி கீழ்கொண்டு வரப்பட்டது குறித்து நிற்பது
a. எழுது பொருட்களை பொருட்களால் பெற்றதை
b. எழுது பொருட்கள் தீ அழிவு
c. எழுது பொருட்களில் நாம் பணத்தை இழப்பது
d. எழுது பொருட்களில் பயன்படுத்தப்படாத இருப்பு இருப்பதை
e. எழுது பொருள் அன்பளிப்பு

22) உரிமையாளர் சொந்த தேவைக்குப் பொருட்களை எடுத்தால்
a. பற்றுக்கணக்குவரவு, கொள்வனவுக்கணக்கு செலவு
b. கொள்வனவுக்கணக்கு செலவு, பற்றுக்கணக்கு செலவு
c. பற்றுக்கணக்கு வரவு, இருப்புக்கணக்கு செலவு
d. விற்பனைக்கணக்கு வரவு, இருப்புக்கணக்கு செலவு
e. பற்றுக்கணக்கு வரவு, மூலதனக்கணக்கு செலவு

23) மூலதனச் செலவு என்பது
a. உரிமையாளர் மேலதிக மூலதனமிடல்
b. நாளுக்கு நாள் வியாபாரத்தின் செலவு மாறிக்கொண்டிருத்தல்
c. நிலையான சொத்துக் கொள்வனவு செய்வதால் அல்லது அவற்றின் பெறுமதியை அதிகரிப்பதனால் பணம் செலவாதல்
d. நிலையான சொத்துவிற்பதில் பணம் செலவாதல்
e. மூலதனம் போடுவது

24) நடவடிக்கைகளை பேரேட்டில் பதிதல் என்ற கணக்குப் பேணும் முறையின் கருத்து
a. ஒரு நடவடிக்கையின் இரட்டைப் பதிவின் முதற் பதிப்பை உருவாக்கல்
b. காசேட்டில் நடவடிக்கைகளைப் பதிவு செய்தல்
c. ஒரு நடவடிக்கையின் இரட்டைப்பதிவின் இரண்டாவது பதிவை உருவாக்கல்
d. மேற்கூறப்பட ... ள் சில

e. மேற்கூறிய எவையுமல்ல

25) கொடுத்த கழிவு காசுப்புத்தகத்தில் இருந்து எங்கு பதிவிடப்படும்

a. கொடுத்த கழிவுக் கணக்கில் வரவுப் பக்கம்
b. பெற்ற கழிவுக் கணக்கில் வரவுப் பக்கம்
c. கொடுத்த கழிவுக் கணக்கில் செலவுப் பக்கம்
d. பெற்ற கழிவுக் கணக்கில் செலவுப் பக்கம்
e. வியாபாரக் கழிவுக்கணக்கில் வரவுப் பக்கம்

# பல்தேர்வு வினாக்களுக்கான விடைகள்

## பொருளியல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | e | 06 | e | 11 | e | 16 | e | 21 | a |
| 02 | a | 07 | b | 12 | a | 17 | a | 22 | b |
| 03 | b | 08 | b | 13 | e | 18 | b | 23 | b |
| 04 | e | 09 | a | 14 | d | 19 | d | 24 | e |
| 05 | d | 10 | a | 15 | d | 20 | c | 25 | e |

## வணிகக் கல்வி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | b | 06 | e | 11 | e | 16 | d | 21 | d |
| 02 | d | 07 | e | 12 | a | 17 | d | 22 | d |
| 03 | b | 08 | d | 13 | a | 18 | e | 23 | b |
| 04 | c | 09 | e | 14 | d | 19 | c | 24 | d |
| 05 | c | 10 | c | 15 | e | 20 | c | 25 | d |

## கணக்கீடு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | e | 06 | d | 11 | a | 16 | b | 21 | d |
| 02 | e | 07 | b | 12 | b | 17 | c | 22 | c |
| 03 | c | 08 | e | 13 | c | 18 | c | 23 | c |
| 04 | d | 09 | d | 14 | a | 19 | a | 24 | c |
| 05 | c | 10 | c | 15 | b | 20 | a | 25 | a |

# நன்றியுரை

யா/ நாவற்குழி மகாவித்தியாலயத்தின் வர்த்தகப்பிரிவு மாணவர்களினால் மாதாந்தம் வெளியிடப்படும் "வணிக தீபம்" இதழின் செயற்பாடுகள் எவ்வித தடங்கலுமின்றி மூன்று மாதகாலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இவ்வாறு வர்த்தக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் வணிக தீபம் ஒளிவீசவும் எம்மோடு ஒத்துழைத்த அனைவருக்கும் நான் நன்றி கூற கடைமைப்பட்டுள்ளேன்.

வணிகதீபத்தின் வளர்ச்சிக்காக ஆசியுரையினை வழங்கியும் எமக்காக எம்மோடு இணைந்து ஆலோசனைகள் பலவற்றை வழங்கிய எமது வித்தியாலயத்தின் முதல்வர் திருமதி. வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களுக்கு எனது முதன்மை நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிகதீபத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அயராது எமக்கு ஊக்குவிப்புக்களையும் பலவகையான உதவிகளையும் வழங்கிய எமது சஞ்சிகைப் பொறுப்பாசிரியர் திரு. சத்தியசாயிபாபா அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கையெழுத்து சஞ்சிகையாக வெளிவந்த வணிகதீபத்தினை அச்சுருவில் வெளியீடு செய்ய உதவிய எனது நண்பர்களுக்கும் மற்றும் வணிகதீபத்திற்கு ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறாக பல்வேறு வழிகளில் இச் சஞ்சிகை வெளி வருவதற்கு உதவிய உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்

**நன்றி**